Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12


நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–23 | 07–08–2004 | சனிக்கிழமை | ஓசை –171



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். (சி-9956) விநாயகர் வீதி, மயிலிட்டி.



விசேட உந்துகணை செலுத்தி பயிற்சி நிறைவு நாள் நிகழ்வில் தமிழீழ தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். நேற்று இடம்பெற்ற இந்நிகழ்வில் விசேட உந்துகணை செலுத்தி அணியினரின் விசேட அணிவகுப்பு மரியாதையை தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

### தென்னிலங்கை மக்கள் மத்தியில்

# இ.த.அ.சபை குறித்துத் தப்பான எண்ணம்


# தோற்றுவிக்கப்பட்டமை துரதிர்ஷ்டமானது

### தென்னிலங்கை சிவில் சமூகக்குழுவிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் அறிவுறுத்து

**இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவு மீள் குடியமர்வு, மீள்கட்டமைப்பு, புனர்வாழ்வு போன்ற பரப்புகளில் மக்களின் உடனடி மனிதாபிமான தேவைகளை மேற்கொள்வதற்குத் தயாரிக்கப்பட்டது. ஆனால் தெற்கிலுள்ள மக்களுக்குத் தவறான எண்ணத்தைத் தோற்றுவிக்க இவ் விடயத்தினை அரசியல்வாதிகள் பயன்படுத்தியுள்ளமை துரதிர்ஷ்டவசமானது என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

நேற்றுத் தன்னைச் சந்தித்த தெற்கிலுள்ள சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளுக்கான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தெற்கிலுள்ள சிவில் சமூகத்தினைப் பிரதிபலிக்கின்ற குழு நேற்றுக் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு அரசியல்துறைத் தலைமையகத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(12 ஆம் பக்கம் பார்க்க)



-பொலநறுவ முத்துக்கலில்-

## கருணா குழுவுடன் தொடர்புடைய இளைஞர் சுட்டுக்கொலை

பொலநறுவை முத்துக்கலில் நேற்றுக்காலை இளைஞர் ஒருவர் இனம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பூபாலப்பிள்ளை கரிகரன் (வயது 22) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். வீட்டிலிருந்து வயலுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை இனம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகும்

க.பொ.த(உ.த) பரீட்சை பெறுபேறுகளை இன்று இணையத்தளங்களில் பார்வையிடலாம். இணையத்தளம் www.doenets.lk என்ற முகவரியில் பார்வையிடலாம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாற்று ஆயுதக் குழு உறுப்பினர் களுதாவளையில் சுட்டுக்கொலை

களுதாவளை பஸ்தரிப்பு நிலையத்திற்குள் நேற்றுப் பகல் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இறந்தவரின் சட்டைப்பைக்குள் இருந்த அடையாள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பசுபிக் பிராந்திய அமெ.தளபதியின் யாழ்.விஜயத்திற்கு பொது அமைப்புக்கள் பலவும் பலத்த கண்டனம் தெரிவிப்பு

அமெரிக்கப் கடற்படையின் பசுபிக் பிராந்திய கட்டளைத்தளபதியின் யாழ். விஜயத்திற்கு யாழ்.குடாநாட்டிலுள்ள பொது அமைப்புக்கள் பல ஆட்சேபம் தெரிவித்துள்ளன. அமெரிக்காவின் இந்நடவடிக்கை பேரினவாதத்திற்கு துணை போவதுடன் சமாதான முயற்சிகளைத் தடம்புரட்டிவிடும் எனவும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவருக்கு அனுப்பிய கடிதத்தில் மாறி மாறி வரும் சிறிலங்கா அரசாங்கங்கள் நிரந்தர சமாதானத்தை எட்டுவதற்கான நடைமுறைகளைக் கைக்கொள்ளாது அசமந்தப் போக்கையே காட்டிவருகின்றன. சிறிலங்கா அரசியலில் ஆழமாக வேர் பதித்து கோலோச்சி வரும் கேடு மிக்க பேரினவாதமே நிரந்தர சமாதானத்திற்கான பாதையில் முட்டுக்கட்டைகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### மக்கள் வங்கி தபால்பொதி தவறிவிட்டது.

வங்கிக்குரிய ஆவணங்கள் அடங்கிய சீலைத்துணியால் ஆன பொதி புதுக்குடியிருப்பு வீதியில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் மக்கள் வங்கியில் ஒப்படைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம். முகாமையாளர் மக்கள் வங்கி முல்லைத்தீவு. (4676)

## சான்றிதழ் வழங்கல்

புதுக்குடியிருப்பு சிறிகனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் உதவியுடன் தமிழீழ. மாணவர் அமைப்பு. தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பும் ஒருங்கிணைந்து நடாத் தும் கணினிப் பயிற்சி நிலைய மீளமைப்பு விழாவும் கணினி கற்கைநெறியைப் பூர்த்தி செய்தமாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளைகாலை10.00 மணிக்கு அப்பிரதேச கணினிப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (08)


# மடு பெருவிழாவை முன்னிட்டு மடு வீதி 5 நாட்கள் முழு நேரமும் திறப்பு

எதிர்வரும் ஆவணி மாதம் 15 ஆம் திகதி மடுமாதா பெருவிழாவை முன்னிட்டு மடுவீதிப் பாதை எதிர்வரும் 13 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை இரவு, பகல் 24 மணி நேரமும் திறந்து வைக்கப்படவுள்ளது என அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. மன்னார் அரசாங்க அதிபர் மடுத் திருப்பணி பதிவாளர் அருட் தந்தை எ.பிலிப் ஆகியோர் அண்மையில் மன்னார் கச்சேரியில் நடாத்திய கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.இது தொடர்பாக சகல அமைப்பினதும்அனுமதி பெற்று இந்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (மி)

# கிளி.பாடசாலை மாணவர்களுக்கு நேற்று மருத்துவப்பரிசோதனை

கிளிநொச்சி நகரப்பகுதி கனிஷ்ட பாடசாலை மாணவர்களுக்கான மருத்துவப் பரிசோதனைகள் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் மருத்துவர்களினால் கிளிநொச்சி மத்தியகல்லூரி, கனகபுரம் மகாவித்தியாலயம், கிளி



சென்திரேசா மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயிலும் கனிஷ்ட தரம் அதாவது முதலாம் ஆண்டு முதல் ஐந்தாம்ஆண்டு வரையான மாணவர்களுக்கு அந்தந்த பாடசாலைகளில் வைத்து மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பெற்றது. தொடர்ந்து ஏனைய கிளிமாவட்ட பாடசாலைகளிலும் மேற்படிமருத்துவப் பரிசோதனை மேற் கொள்ளப் படவுள்ளதாக வைத்திய கலாநிதி யூடிரமேஸ்குமார் தெரிவித்துள்ளார். சோ.கு)


## மலிவு! மலிவு! மலிவு! மலிவு! மலிவு!

மிகவும் மலிவு! ☆ மிக்க மலிவு!!

### ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

ஸ்தாபனத்தாரின் மலிவு விற்பனை

யாழ். மக்களே!

எமது நிறுவனத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவை முன்னீட்டு 19-07-2004 முதல் 20.08.2004 வரை மலிவு விலையில் விற்பனை நடைபெறும்

வாருங்கள் வந்து பாருங்கள்

சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு

இந்திய வெளியீடுகளுக்கு 20% கழிவு (3மடங்கு)

பிறநாட்டு வெளியீடுகளுக்கு 20% கழிவு

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக்கல்லூரி, கல்வியியற்கல்லூரி, பொது நிறுவனங்கள், நூலகங்கள் முதலானவற்றிற்குக் கடன் அடிப்படையில் புத்தகங்கள் வழங்கப்படும். அத்துடன், இலவச விநியோகமும் உண்டு.

பாடசாலைகளுக்கான தரமான உள்நாட்டுப்பொருள்கள், மூலதனப் பொருள்கள், அழிபொருள்கள் ஆகியனவற்றை ஒரே கூரையின் கீழ் பெற்றிட நாடுங்கள்.

### ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி-9959) T.P 2225542


## உதவிபுரியக் கோரிக்கை



இல.14, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி என்னும் முகவரியில் வசித்துவரும் ஏழு மாத அகவையுடைய பெண் குழந்தையான பாஸ்கரன் பவித்திரா என்பவருக்கு இருதயத்தில் ஓட்டை இரண்டு உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவருக்கு உடனடி சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.மேலும் இச்சத்திர சிகிச்சைக்காக மொத்தமாக 350,000 ரூபா பணம் தேவைப்படுகின்றது. வறுமைக்கோட்டிற்குஉட்பட்ட இக்குடும்பத்திற்கு இவ்வளவுபெரியதொகை கொடுத்து சத்திர சிகிச்சை செய்ய முடியாதுள்ளதால் பெருமனது படைத்த யாவரும் இச்சிறுமியின் சத்திர சிகிச்சைக்கு வேண்டிய நிதியுதவியை நல்கிடுமாறு கிளி.மருத்துவ சங்கத்தினர் கேட்டுக் கொள்வதுடன் கீழ்வரும் கணக்கிற்கு தங்களது உதவித்தொகைகளை செலுத்துமாறு அன்புடன் வேண்டியுள்ளனர். கணக்கு இல.29115,இலங்கைவங்கி, கிளிநொச்சி. (சோ,கு)

# பணிநிலை வேண்டுகை

மனிதவள மேம்பாட்டுப்பகுதியால் ஆரம்பிக்கப்படவுள்ள கணக்கியல், கணக்காய்வுப் பயிற்சிக் கல்லூரிக்குப் பின்வரும் பணிநிலைகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:-**

1] கல்லூரி மேற்பார்வையாளர்

2] சிற்றூழியர்

**தகைமைகள்:-**

1) பணிநிலை 1-க.பொ.த உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2) பணிநிலை 2-குறைந்தது ஆண்டு எட்டு கல்வி கற்றவராயிருத்தல் வேண்டும்.
3) அகவை - 22வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:-**

1) பணிநிலை 01ற்கு ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
2) பணிநிலை 02 இற்கு ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்
3) விண்ணப்ப முடிவுநாள் -10.08.2004.
4) விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் -12.08.2004காலை 9.00 மணி.
5) நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:-
   மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
   நிதித்துறை,
   நாகதம்பிரான் வீதி,
   கிளிநொச்சி.
6) நேர்முகத்தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ்களோடு வருக.
7) விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-
   பொறுப்பாளர்,
   மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
   நிதித்துறை,
   நாகதம்பிரான் வீதி,
   கிளிநொச்சி.

ஆளுகை
மனிதவள மேம்பாட்டுப்பகுதி (சி-9768)

## முக்கிய அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேசசபைக்குட்பட்ட பிரதேசத்தில் அனுமதிக்கப்பட்ட இடங்களில் இருந்து மட்டும் கல், மண்,மணல், கிரவல் ஏற்றுவது அனுமதிக்கப்பட்டிருப்பதோடு அதற்கான அனுமதியை கரைதுறைப்பற்று பிரதேச சபையிட மிருந்தோ (தலைமை அலுவலகம்) அல்லது அதன் உப அலுவலகங்களிடமிருந்தோ பெற்றுக்கொள்ள வேண்டும் அனுமதியில்லாமல் கல், மண், மணல் ஏற்றுவது கண்டுபிடிக்கப்பட்டால் ரூபா2000/=க்கு குறையாத தண்டம் விதிக்கப்படும் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

[இ.கிருஸ்ணபிள்ளை]
செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.

(சி-9175)

## துயர் பகிர்கின்றோம்



மலர்வு 1949.07.01 உதிர்வு 2004.08.05

### செல்வி பார்வதி-சிவகுரு

(கணக்காளர் வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்கம்)

நேசமுடன் என்றும் நினைவில்
நிறைந்திருக்கும் பாசமிகு பார்வதியே
உனை இழந்த செய்தி கேட்டு
உளம்தாங்கா வேதனையில்
தவிக்கிறோம். கூட்டுறவில்
உன் சேவை நிலைத்து நிற்கும்
உன் ஆத்மா சாந்திக்காக வேண்டுகின்றோம்.


அங்கத்தவர்கள், பணியாளர்கள்,துணுக்காய் பகுதி பல.நோ.கூ.சங்கம் துணுக்காய்.

(4131)

# இராணுவ அதிகாரிகளை அதிர்ச்சி அடைய வைத்த சனாதிபதி ஜோர்ஜ் புஷ்சின் வோஷிங்டன் உரை


(வோஷிங்டன்)

**அமெரிக்காவை துன்புறுத்த தம்முடைய அரசு புதிய வழிகளை யோசித்து வருவதாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் தெரிவித்த கருத்தானது அமெரிக்க மக்களிடையே சுவாரசியமான பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது.**



நேற்று முன்தினம் தலைநகர் வோஷிங்டனில் இராணுவத்தினருக்கென 417 பில்லியன் அமெரிக்க டொலர் தொகையினை ஒதுக்கி அதனைக் கையளிக்கும் வைபவம் ஒன்று இடம்பெற்றது. இந் நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் உயர் அதிகாரிகள் அனைவரும் கலந்து கொண்டுள்ளனர். அவர்கள் மத்தியில் உரையாற்றிய சனாதிபதி புஷ் நாட்டைக் காக்க புதிய வழிகளை யோசித்து வருவதாகக் கூறுவதற்குப் பதிலாக நாட்டைத் துன்புறுத்தும் வழிகளை நமது அரசு யோசித்து வருவதாகக் கூறிவிட்டார். இதனைக் கேட்டு அங்கிருந்த இராணுவ அதிகாரிகள் உட்படஅனைவரும் அதிர்ச்சியடைந்து விட்டனர்.

அதிபர் புஷ் அவ்வப் போது தவறுதலாக எதனையும் மாற்றிக் கூறுவது வழக்கம் என்பதால் அவரது இந்தப் பேச்சு இம் முறையும் சுவாரசியமான பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது.



ஈராக்கிய தீவிரவாதிகள் கடும் சித்திரவதைக்குள்ளானதாகக் கருதப்படும் டென்மார்க் இராணுவ சோதனைச் சாவடியைக் கடந்துசெல்லும் ஈராக்கியர் ஒருவர்.

## நீண்டகாலமாகத் தேடப்பட்டுவந்த அல்-ஹைதா தீவிரவாதி சவுதி அரேபிய பாதுகாப்புப் படையினரிடம் பிடிபட்டார்

அல்-ஹைதா தரப்பினரின் தொடர்ச்சியான வன்செயல்களுக்கு எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டுவரும் சவுதியரேபிய பாதுகாப்புப் படையினர் நீண்டகாலமாகத் தேடப்பட்டு வந்த தீவிரவாதி ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். இந்த விடயம் தொடர்பாக சவுதி உள்துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சந்தேகநபரின் பெயர் ஷகாராணி என்றும் இவர் சவுதியரேபியாவின் தென்பகுதியிலுள்ள மலைப்பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டார் என்றும், அவரைக் கைது செய்யும்போது அவர் எந்தவித எதிர்ப்பையும் காட்டவில்லையென்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சவுதியரேபியப் பாதுகாப்புப் படையினர் யூன் மாதத்தில் பயங்கரவாதக்குழுவின் தலைவரான அப்துல்அச்சைக் கொலை செய்த பின்னர் ஷகாராணியே சவுதியில் நடைபெற்ற பயங்கரவாத நடவடிக்கையினைத் திட்டமிட்டு நடத்திவந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவருடன் மற்றும் இரண்டு சந்தேக நபர்களையும் பலமாதங்களாகத் தேடிவந்ததாகத் தெரிவித்த அதேவேளை சவுதி உள்துறை அமைச்சு மேலும் கூறுகையில், இந்தக்குழுவின் இரண்டாவது நபரும் ஷகாராணியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

## தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் எதிரொலி ஈராக்கின் கவர்னர் ஒருவர் இராஜினாமா

ஈராக்கின் கவர்னர் ஒருவர் தனது பதவியை தீவிரவாதிகளின் அச்சுறுத்தலையடுத்து இராஜினாமா செய்துள்ளார்.

ஈராக்கின் அம்பார் மாகாணக் கவர்னர் அப்துல்கலீம் ஜெஷ்சிட்ரனாதி நகரிலுள்ள அவரது வீட்டை கடந்தவாரம் சூறையாடிய தீவிரவாதிகள், அவரது மூன்று மகன்களையும் கடத்திச் சென்றனர்.

அப்துல்கலீம் தனது கவர்னர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும். இல்லையேல் அவரது மகன்கள் கொல்லப்படுவார்கள் என்று தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்தனர்.

இதனையடுத்து அப்துல்கலீம் தனது கவர்னர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். இதனையடுத்து அவரது மகன்மார் மூவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அப்துல் கலீம் தனது மூன்று மகன்களையும் கட்டித்தழுவி கண்ணீர்விடும் காட்சிகளை தீவிரவாதிகள் படம் பிடித்து இணையத்தளம் மூலம் வெளியிட்டுள்ளனர்.

## ஈராக்கில் உள்ள ஒவ்வொரு இந்தியனுக்கும் பாதுகாப்பு வழங்கமுடியாது-ரிச்சட்பவுச்சர்

ஈராக்கில் உள்ள ஒவ்வொரு இந்தியர்களுக்கும், அமெரிக்க படையினரால் பாதுகாப்பு கொடுக்கமுடியாது என அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ரிச்சட்பவுச்சர் கூறியுள்ளார். இந்தியர்கள் மட்டும் அல்லது, பாகிஸ்தான், பங்களாதேசைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு உறுதி அளிக்கமுடியாது.

ஈராக்கில் அமெரிக்க கூட்டுப் படைகள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துகிறார்கள். மேலும் பல ஆபத்துக்களும் அங்கு இருக்கின்றன. அங்கு அமைதியான சூழ்நிலை ஏற்பட முயற்சி எடுத்து வருகின்றோம். ஈராக் அரசுடன் இணைந்து செயற்படுகிறோம் ஆனால் ஒவ்வொரு தொழிலாளிக்கும் நாங்கள் பாதுகாப்பு அளிக்க முடியாது. ஈராக் நாட்டை புதுப்பிக்கும் பணியில் எங்களுடன் இணைந்து செயற்படும் ஈராக்கியர்களும் தாக்கப்படுகிறார்கள். எனவே ஒவ்வொரு ஈராக்மக்களுக்கும் எங்களால் பாதுகாப்பு கொடுக்கமுடியாது. நாங்கள் ஈராக்கியர்களுக்கு பயிற்சி கொடுக்கிறோம். அவர்களே தங்களுக்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுகிறோம். ஆனால் தீவிரவாதிகளை எதிர்ப்போம். இவ்வாறு அமெரிக்க செய்தித் தொடர்பாளர் கூறினார்.



சியா முஸ்லிம் மதகுருவான மக்டடாசாதரின் உருவப்படத்தின் முன்னால் நின்று மரியாதை செலுத்தும் சியா முஸ்லிம் ாராளிகள்.

## அமெரிக்க ராணுவத்தினரின் தாக்குதலில் நஜாப்பில் 20 ஈராக்கியர் உயிரிழப்பு

ஈராக்கின் நஜாப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வன்முறைச் சம்பவத்தில் சுமார் 20 ஈராக்கியர்களும் அமெரிக்க வீரர் ஒருவரும் பலியாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது. அமெரிக்க உலங்கு வானூர்தி ஒன்று சியா முஸ்லிம் போராளிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதையடுத்து சியா முஸ்லிம் பள்ளிவாசல் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் பொதுமக்கள் மீதும் அமெரிக்கப் படையினர் தாக்குதல்களை மேற்கொண்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சியாச்சின் மலைப்பகுதியில் இருதரப்பு படையினரையும் இந்தியா-பாக். குறைத்துக் கொள்வதற்கு இணக்கம்

சியாச்சின் மலைப்பகுதியில் இந்தியா-பாகிஸ்தான் தமது படைகளைக் குறைத்துக் கொள்வதென்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன.

நேற்று முன்தினம் இரு நாட்டு பாதுகாப்பு செயலர் மட்டப்பேச்சுக்கள் ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் புதுடில்லியில் நடந்துள்ளது.

72 கிலோமீற்றர் நீளமுள்ள சியாச்சின் பனிமலையிலுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றியே நேற்று முன்தினம் விவாதிக்கப்பட்டது. இந்தப் பேச்சுக்களின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர், சியாச்சின் போன்ற ஆள் அரவமற்ற எல்லைப் பகுதிகளில் படைகளைக் குறைப்பது என்று ஆலோசிக்கப்பட்டுள்ளது என்றும் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி முதல் கடைப் பிடிக்கப்பட்டு வரும் போர் நிறுத்தத்தை மேலும் நீடிப்பது என்றும் விவாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். இந்தியக் குழுவிற்கு பாது காப்பு செயலர் அஜய் விக்ரம் சிங் தலைமை ஏற்றியிருந்தார். பாகிஸ்தான் குழுவிற்கு பாகிஸ்தான் பாதுகாப்பு செயலர் ஹமிட் நவாஸ் பஸ்வான் தலைமையேற்று பேச்சுக்களை நடத்தினர். இதே வேளை பாகிஸ்தான் பாதுகாப்பு மட்டக் குழுவினர் இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் தீட்ஷித், பாதுகாப்பு அமைச்சர் பிரணவ் முகர்ஜி, உள்ளிட்டோரையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

## ருவாண்டா காட்டுப்பகுதி அழிவுறும் அபாயம்

ருவாண்டா, அதனைச் சுற்றி யுள்ள உகண்டா, குவாங்கோ ஆகிய நாடுகளில் நீடித்து வரும் உள் நாட்டுச் சண்டையினால் அங்கு செயற்பட்டுவரும் தீவிரவாத அமைப்புக்கள் ருவாண்டாவின் காட்டுப்பகுதியை தளமாக கொண்டிருப்பதால் காடுகள் அழிக்கப்பட்டு வருவதாக ருவாண்டா அரசு கவலை வெளியிட்டுள்ளது. அத்துடன் இந்த காடுகள் அழிக்கப்படுவதால் அங்கு காலம் காலமாக வசித்துவரும் கொரில்லா குரங்குகள் இனம் அழியுண்டு போகின்றது என்றும் கூறப்படுகின்றது.

## தலை ஒட்டிப்பிறந்த பிலிப்பைன்ஸ் குழந்தைகள் வெற்றிகரமாக சிகிச்சை மூலம் பிரிப்பு

தலை ஒட்டிப்பிறந்த பிலிப்பைன்ஸ் நாட்டு இரட்டைக்குழந்தைகள் நீண்ட அறுவைச்சிகிச்சை மூலம் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் தம்பதிக்கு தலையின் மேற்பகுதி ஒட்டிய நிலையில் இரண்டு ஆண்குழந்தைகள் பிறந்தன. அறுவைச்சிகிச்சை மூலம் இந்தக் குழந்தைகளைப் பிரித்தெடுக்க அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள குழந்தைகள் மருத்துவமனையில் 10 மாதங்களுக்கு முன்னரே இந்தக் குழந்தைகள் அனுமதிக்கப்பட்டனர்.

குழந்தைகளின் உடல் நிலையை ஆராய்ந்த மருத்துவக் குழுவினர் பல்வேறு கட்டங்களாக அறுவைச் சிகிச்சை மேற்கொண்டனர்.

இதனையடுத்து இறுதிக்கட்ட அறுவைச்சிகிச்சை நேற்று மேற்கொள்ளப்பட்டது. நீண்ட அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் குழந்தைகள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. அறுவைச்சிகிச்சைக்குப் பின்னர் குழந்தைகள் ஆரோக்கியமாக இருப்பதாக மருத்துவக் குழு தமது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளது.





யப்பானில் ஹிரோசிமா நகரில் அணுகுண்டுத்தாக்குதல் நடந்த 59 வருட நினைவு நாளான நேற்று குண்டுத்தாக்குதலில் பலியான 1,40000 பேருக்கு நினைவஞ்சலி செய்யும் மக்களையும் மலர்வளையத்துடன் செல்லும் யப்பானியப் பிரதமரையும், ஈராக்கிற்கு துருப்புக்களை அனுப்புவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்களையும் காணலாம்.

## இந்தியாவின் குஜராத் மாநிலத்திற்கு முழுமையான உதவி வழங்க வேண்டும்

### -மத்திய அரசிடம் அத்வானி வேண்டுகோள்

மழையால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் குஜராத் மாநிலத்திற்கு முழுமையான உதவிகளை மத்தியரசு வழங்கவேண்டுமென்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.கே. அத்வானி வலியுறுத்தியுள்ளார். சூரத் உள்ளிட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தெற்கு குஜராத் பகுதிகளை நேற்றுப் பார்வையிட்ட அத்வானி, வெள்ளத்தால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகச் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

# இலங்கையில் வீதிவிபத்துக்களால் நாள் ஒன்றுக்கு ஆறுபேர் மரணம்

## – வவு. பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு அதிகாரி

(வவு. செட்டிகுளம்)

**இலங்கையில் தற்போது வீதி விபத்துக்களால் நாள் ஒன்றுக்கு 5 முதல் ஆறுபேர் வரை இறப்பதாக வவுனியா பொலிஸ் போக்குவரத்துப்பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார். அண்மையில் முச்சக்கர வண்டி ஓட்டுனர்களுடனான சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

1978ஆம் ஆண்டில் இலங்கையில் 22 ஆயிரத்து 733 வாகனங்கள் இருந்ததாகவும், எனினும் தற்போது 18 இலட்சத்து 92 ஆயிரத்து 367 வாகனங்கள் பாவனையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாள் ஒன்றுக்கு இடம் பெறும் விபத்துக்களால் 5முதல் ஆறு பேர்இறப்பதாகவும் அத்துடன் ஒவ்வொரு மணித்தியாலமும் இடம் பெறும் விபத்துக்களால் 5முதல் 6 பேர் காயமடைவதாகவும அவர் தெரிவித்துள்ளர்ர். இவ்வாறான விபத்துக்களுக்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்த்தால் பெரும்பாலான சாரதிகளின் கவனயீனமே இத்தகைய விபத்துக்குக் காரணம் என்றும், சாரதிகள வாகனம் செலுத்தும் போது மனதை ஒருமுகப்படுத்தி வாகனம செலுத்துவது மிக முக்கியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். வாகனத்தில் பயணிப்போர், பாதசாரிகள், பாடசாலைப்பிள்ளைகளின் பாதுகாப்பு வாகன சாரதிகளின் கையிலேயே இருப்பதாகவும் இதனை அவர்கள் உணர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (21)

# அக்கராயன் அ.த.க.வித்தியாலயம் தமிழ்த்தினப் போட்டியில் முதலிடம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான வலயமட்ட தமிழ்த்தினப் போட்டியில் திறந்தபோட்டியான சிந்து நடைபெற்றபோட்டியில் அக்கராயன் அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இவ்வித்தியாலயத்தினால் ஆற்றுகை செய்யப்பட்ட 'அருச்சுனன் தபசு' என்ற சிந்து நடைக்கூத்தே முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.

கரைச்சிக்கோட்ட மட்டப் போட்டியிலும் இக்கூத்து முதலாம் இடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (கா)

## பட்டமளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் பட்டமளிப்புவிழா நாளை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் அன்றையதினம் காலை 10.30 மணிக்கு மேற்படி பட்டமளிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ.கு)

## கண்காட்சி

கிளிநொச்சி, கோணாவில், அக்கராயன் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவுக் கண்காட்சி 5ஆம் திகதி வியாழக்கிழமை சிறப்புற நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் ஆ.கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை பிரதி அதிபர் திருமதி. மோ. கிருஷ்ணபிள்ளை, ஆசிரியர் சு.பாலகுமார் ஆகியோர் ஏற்றி வைத்தனர், தமிழீழ தேசியக கொடியை பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் வ.சண்முகம் ஏற்றிவைத்தார். பாடசாலைக் கொடியினை வித்தியாலய அதிபர் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து கிளி. வலயக்கல்வி பணிமனையின் ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் பொன். தில்லைநாதன் அவர்கள் நாடாவை வெட்டிக் கண்காட்சியை திறந்து வைத்தார். மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பெரும் திரளானோர் இக்கண்காட்சியைப் பார்வையிட்டனர். (கா)

# சரஸ்வதி முன்பள்ளி விளையாட்டு விழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் , முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய ஒழுங்கமைப்பில் பச்சிளைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பளை நகர சரஸ்வதி முன்பள்ளியின் 2004 ஆம் ஆண்டுக்கான திறனாய்வு நிகழ்வுகள் கடந்த செவ்வாய் அன்று முன்பள்ளி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

பளை ப.நோ.கூ.சங்க தலைவரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர்களுகிடையில் 26 விளையாட்டுக்கள நடாதப்பட்டதோடு பழையமாணவர்கள், பெற்றோர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோருக் கான போட்டிகளும் நடாத்தப்பெற்றன. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் ராஜன், கிளி. கச்சேரி திட்டமிடல் பகுதியைச் சேர்ந்த கேதீஸ்வரன், பச்சிலைப் பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகக் தலைவர் கார்த்திகேசு ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இந்நிகழ்வில் பெரு மளவு மக்களும், அரசஅரசசார் பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்தனர். (ச)

# நியாப் நிதி ஒதுக்கீட்டில் வீதிகள் புனரமைப்பு

(முள்ளியவளை)

நியாப் நிறுவன திட்ட நிதி ஒதுக்கீட்டில் முள்ளியவளை பகுதியில் குறுக்குத்தெருக்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி வீதி புனரமைப்பில் முள்ளியவளை மேற்குப் பகுதியில் உள்ள ராணி வீதி இன்பன் வீதி, பாலேந்திரன்வீதி தயாவீதி, பொன்நகர் வீதி, என்பன புனரமைக்கப்பட்டு வருவதுடன் பொன்நகர் வீதியில் 350 m நீளமான வீதி புனரமைக்கப்பட்டு மதகும் அமைக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி வீதிகளில் பலமதகுகள் அமைக்கபடவேண்டிய போதும் நிதி ஒதுக்கீடு பற்றாக் குறையால் கிரவல் மட்டும் போடப்பட்டு வருகின்றது. மதகுகள் அமைக்க தவறும் பட்சத்தில் எதிர்வரும் மழைகாலத்தில் மழை வெள்ளம் இவ்வீதிகளை அரித்து பாயும் நிலை காணப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.(ஆ)

### - மூதூர் -வெருகல் பிரதேசத்தில் -

# த.தே. எழுச்சிப் பேரவையின் இரண்டாவது சங்கம நிகழ்வு

(திருகோணமலை)

தமிழ்த் தேசிய எழுச்சிப் பேரவையின் இரண்டாவது சங்கம நிகழ்வு மூதூர்-வெருகல் பிரதேசத்தில் பூநகர் திருவள்ளுவர் வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வெருகல் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் செஞ்சேரன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். வெருகல் தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் சங்கர் தலைமை வகித்தார். செயலாளர் தெய்வேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். விடுதலைப்புலிகள் தமிழீழ துணைஅரசியல் பொறுப்பாளர் தங்கன், விடுதலைப்புலிகள் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், தேசிய எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் சஞ்சய், தமிழீழ மாவீரர் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன், வலயக்கல் விப் பணிப்பாளர் ஆ.குணராஜ ரட்ணம் ஆகியோர் நிகழ்வில் பங்குபற்றிப் பேசினார்கள். கிராம மக்களின் தேவைகளை இனங்கண்டு கிராமங்களின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதே எழுச்சிப் பேரவையின் நோக்கமாகும் என்று நிகழ்வில் வலியுறுத்தப்பட்டது.

## பொதுக்கூட்டம்

(முள்ளியவளை)

முள்ளியவளை பிரதேச மாதர் சங்க பொதுக்கூட்டம் கடந்த செவ்வாய்க் கிழமை பி.ப.3.00 மணிக்கு முள்ளியவளை மாவீரர் மண்டபத்தில் முள்ளியவளைப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.நாகமைந்தன் தலைமையில் அகவணக்கத்துடன் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் மாதர் சங்கங்களின் செயற்பாடு, மாதர்களின் செயற்பாடு, நன்னடத்தை பற்றிய சிறப்பு கருத்துரையினை முல்லை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி நிகழ்த்தினார். இதனையடுத்து பிரதேச மாதர் சங்க புதிய உறுப்பினர் தெரிவு இடம்பெற்றது. (ஆ)

# சிறுவர் நன்நலத்தைப் பாதுகாக்க மன்னாரில் புதிய அமைப்பு

(மன்னார்)

சிறுவர் நன்நலத்தை பாதுகாக்கும் நிலையம் ஒன்று அண்மையில் மன்னாரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையமானது மன்னார் பொது வைத்தியசாலையிலேயே இயங்கி வருகின்றது. இதன் இணைப்பாளராக டாக்டர் சுகந்தி அவர்கள் பணியாற்றி வருகிறார். திங்கள் செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் இக்காரியாலயத்திற்குச் சென்று பொதுமக்கள் தமது முறைப்பாடுகளைச் செய்யலாம்.

இந்த நிறுவனம் சிறுவர்களின் உள ஆற்றலை வளப்படுத்தல், சிறுவர்களுக்கு ஏற்படும் கொடுமைகளை இனங்கண்டு நடவடிக்கை எடுத்தல், சிறுவர்களின் உரிமைகளை பாதுகாத்தல் போன்ற பல விடயங்களை இந்த நிறுவனம் கவனத்தில் எடுத்து செயற்பட்டு வருகின்றது. (மி)

# கேப்பாபுலவு கிராமத்தின் தேவைப்பகுப்பாய்வு

கேப்பாபுலவு கிராமத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தேவைப்பகுப்பாய்வு கடந்த திங்கட்கிழமை கேப்பாபுலவில் நடைபெற்றது.

"கார்ப்" திட்ட நிதியில் "நிகொட்" நிறுவனத்தின் அனுசரணையுடன் தமிழர் புனர் வாழ்வுக்கழகம் இக்கிராம அபி விருத்தியை முன்னெடுத்துச் செல்கின்றது.

இதில் மக்களிடம் தேவைகள் தொடர்பாகக் கேட்டறியப்பட்டு வேலைகள் எவ்வாறு இக்கிராமத்தில் மேற்கொள்வது என்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

இந்த நிகழ்வில் நிகொட் திட்ட வடமாகாண சமுதாய அபிவிருத்தித் திட்ட இணைப்பாளர் திரு.தேவநேசன் குரூஸ், கரைதுறைப்பற்று உதவி அரசஅதிபர் திரு.காசிப்பிள்ளை, உதவித்திட்டமிடல் இணைப்பாளர் S.ரவி, முல்லை. மாவட்ட சமுதாய அபிவிருத்தித்திட்ட இணைப்பாளர் வி.நவநீதன், தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளர் திரு.செல்வரட்ணம், தமிழர் புனர்வாழ்வுக்கழக 'நிகொட்' திட்ட இணைப்பாளர் A.சுதர்சன் ஆகியோருடன் அக்கிராம மக்கள், கிராம அலுவலர் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (20)

## செயற்குழு தெரிவு

(மல்லாவி)

மு/மல்லாவி மத்தியகல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயற்குழு தெரிவு கல்லூரி மண்டபத்தில் கடந்த 28.07.2004 பி.ப.3.30 மணியளவில் துணுக்காய் வலயக கல்விப்பணிப்பாளர் மா.தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் கருத்துரைகளை முல்லை.மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் அறிவன்பன நிகழ்த்தினார். பின்பு அபிவிருத்திச் சங்கச் செயற்குழு தெரிவுகள் இடம்பெற்றன. (24)

# கலிங்கு சேதம் போக்குவரத்து பாதிப்பு

(மல்லாவி)

கோட்டைகட்டிய குளம் பாடசாலைக்கருகாமையிலுள்ள கலிங்கு சேதமடைந்துள்ளது. இதனால் போக்குவரத்துக்கள் செய்யமுடியாதுள்ளதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி நீரோடி சேதமடைந்துள்ளதால் பேருந்துக்கள், உந்துருளியில் செல்வோர்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து மேற்படி நீரோடியினை புனரமைக்க வேண்டுமென அப்பிரதேசவாசிகள் கேட்கின்றனர். (24)

# முள்ளியவளை வைத்தியசாலையில் கடந்த மாதம் 4097 பேர் சிகிச்சை

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஆடி மாதம் 4097 நோயாளர் சிகிச்சை பெற்றுள்ளதாக மேற்படி வைத்தியசாலையின் ஆடிமாத நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கை தெரிவிக்கையில் வெளிநோயாளர் பிரிவில் 2794 பேரும், சாதாரண காய்ச்சலினால் 557 பேரும், சிரங்குக்காக 337 பேரும், குருதிச்சோகையினால் 216 பேரும், சிறுசத்திர சிகிச்சைக்காக 80 பேரும், மலேரியாக்காய்ச்சலுக்காக 43பேரும், சிகிச்சை பெற்றுள்ளதாக தெரிவிக்கும் அறிக்கை, மேற்படி வைத்தியசாலையின் மத்திய மருந்தக மகப்பேற்றுமனை கடந்த மாதம் மகப்பேற்றுக்காக 40 கர்ப்பிணித்தாய்மார் அனுமதிக்கப்பட்டு அதில் 22சிசுப் பிறப்பு நிகழ்ந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (ஆ)

## முறிப்புக்கிராமத்தில் மாவீரர் படிப்பகம்

(முள்ளியவளை)

முள்ளியவளைப்பிரதேச முறிப்புக்கிராம அரசியல்துறை பொறுப்பாளர் செந்தூரனின் ஒழுங்குபடுத்தலில் முறிப்பு ஊரக தேசிய எழுச்சிப் பேரவையினரால் முறிப்புக்கிராமத்தில் மாவீரர் படிப்பக கட்டடத் தொகுதி எதிர்வரும் 11.08.2004 அன்றுகாலை 9.30 மணிக்கு திறந்துவைக்கப் படவுள்ளது. மேற்படி நிகழ்வில் துறைசார்ந்த பொறுப்பாளர்கள் தேசிய எழுச்சிப் பேரவையினர், கிராம அலுவலர்கள் , அரச அதிகாரிகள் என முக்கிய பிரமுகர்கள கலந்து கொள்ளவுள்ளனர். (ஆ)

# மிருக வைத்தியர்கள் இன்மையால் கால்நடை வளர்ப்போர் கவலை

(முள்ளியவளை)

கரைதுறைப்பற்றுப்பகுதியில் கால்நடை வைத்தியர் இன்றி கால்நடை வளர்ப்பாளர்கள் பல நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேற்படி பகுதியில் பல ஆண்டுகளாக மிருக வைத்தியர்கள் இன்மையால் மிருகநோய்த் தடுப்பு நடவடிக்கையோ அல்லது ஏனைய பகுதிகளைப் போன்று மிருக வளர்ப்பு உக்குவிப்பு நடவடிக்கையோ, கால்நடை சினைப்படுத்தல் செயற்பாடுகளோ, புதிய இன மிருக அறிமுகமோ அற்ற நிலையில் இப்பகுதி உள்ளதால் தற்போது கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள கால்வாய்நோய்த் தடுப்பு செயற்பாடுகள் இன்றி மக்கள் வேறு பிரதேச மிருக வைத்திய அதிகாரிகளை நாட வேண்டிய அவலநிலையில் உள்ளதாக மிருகவளர்ப்பாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஆ)

# உசன் பகுதி மக்களின் வீடுகளை இராணுவம் ஒப்படைக்க வேண்டும்

## தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் வலியுறுத்து

(தென்மராட்சி)

**உசன் பகுதியை ஆக்கிரமித்துள்ள சிறிலங்கா இராணுவத்தினர் உடனடியாக அவ்விடத்திலிருந்து வெளியேறி வீடுகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு எழுதியுள்ள கடிதத்தில், சிறிலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு இரண்டரை வருடங்களுக்கு மேல் சென்றுள்ள இன்றைய நிலையில் உசன் பகுதி மக்கள் தங்களின் இருப்பிடங்களுக்குச் செல்வதற்குப் போராட்டம் நடாத்தும் நிலை தோன்றியுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி குறித்த கால எல்லைக்குள் மக்களின் வாழ்வில் இயல்புநிலை தோன்ற வேண்டும் என்பதாகும். ஆனால் இதுவரை காலமும் இங்குவாழும் மக்களின் வாழ்க்கையில் எவ்வித இயல்பு நிலையும் தோன்றவில்லை. மாறாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினரினதும், இராணுவத்தினரதும் திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்களே மேலோங்கி வருகின்றது.

இந்நிலையிலேயே முதற்கட்டமாக உசன் மக்கள் தமது போர்ராட்டத்தினை ஆரம்பித்துள்ளார்கள். இம் மக்களது வீடுகள் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கின்றது. அங்கிருந்து ஆக்கிரமிப்புப் படையை வெளியேறுமாறு அப்பகுதி மக்கள் பல தடவைகள் பலவழிகளில் கோரியுள்ளார்கள். ஆனால், இதுவரைக்கும் இராணுவம் வெளியேறி வீடுகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்கவில்லை. மாறாக அங்கு இராணுவ முகாம்களைப் பலப்படுத்தி வருகின்றது. இறுதியாக மக்கள் கடந்த 31.07.2004 காலப் பகுதிவரை காலக்கெடு விதித்து மகஜர் அனுப்பிய போதும் இராணுவம் கடந்த காலங்களில் கூறிய பதிலையே திரும்பத் திரும்பக் கூறிவருகின்றது.

இவ்வாறான செயலை, ஆக்கிரமிப்புக்களை இராணுவம் தொடருமானால் குடாநாட்டிலுள்ள அனைத்து மக்களையும் ஒன்றுசேர்த்து பாரிய மறியல் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டிய சூழலுக்கும் எம்மை உள்ளாக்கும்.

எனவே உசன் பகுதியில் ஆக்கிரமித்துள்ள சிறிலங்கா இராணுவத்தினர் எந்தவித காரணங்களையும் நியாயப்படுத்தல்களையும் கூறாமல் உடனடியாக அங்குள்ள வீடுகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு இராணுவம் வீடுகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க மறுக்குமானால் இராணுவத்திற்கு எதிரான பாரிய போராட்டங்களுக்கு யாழ். குடாநாட்டு மக்களை இட்டுச் செல்வதாக அமையும். என்பதை புதிதாகப் பொறுப்பேற்க உள்ள இராணுவத் தலைமை கருத்தில் கொள்ளல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பன்றிகள் தொல்லை

தென்மராட்சி மட்டுவில், கச்சாய் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயக் காணிகளில் பன்றிகளின் தொல்லைகள் அதிகரித்து வருகின்றன. அண்மைக்காலமாக அதிகரித்துள்ள பன்றிகளின் தொல்லைகளால் அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (33)

## பச்சை மரங்களைத் தறிக்கும் படையினர் குறித்து மக்கள் விசனம்

வடமராட்சிப் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்களது சமையல் பயன்பாட்டிற்கென பலாலி உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து பெருமளவு பச்சை மரங்கள் தறித்து எடுத்துச்செல்லப்படுவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

தனியார் உழவியந்திரங்கள் மூலம் இம்மரங்கள் பொலிஸ் நிலையங்களுக்கு எடுத்துச்செல்லப்படுவதாகக் கூறப்படுகின்றது. பெரும்பாலும் சிவில் உடையில் வரும் பொலிசார் இவ் வாகனங்களுக்குப் பாதுகாப்பாகச் செல்லுவதாகவும் அயல் கிராம மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்

இவ்வாகனங்களில் பெரும்பாலும் மாலை வேளையிலோ அல்லது இரவிலோ இவ்வாறு பச்சை மரங்களை எடுத்துச்செல்கின்றனர். இதே வேளை உயர்பாதுகாப்பு வலயப்பகுதியிலுள்ள பொது மக்களுக்குச் சொந்தமான பயன்தரு மரங்கள் படையினரால் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (27)

## கைதடி வடக்கு குவாரி வீதி புனரமைப்பது எப்போது

கைதடி வடக்கு குவாரி வீதி-கைதடி மானிப்பாய் வீதியில் இருந்து கைதடி வடக்கு வரை உள்ள ஆறு கிலோ மீற்றர் பிரதான போக்குவரத்து வீதி இதுவரை புனரமைக்கப்படாமல் இருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த வீதியைப் புனரமைக்க 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பல மாதங்கள் ஆகியும் இவ்வீதியை செப்பனிடவேண்டிய வீதி அபிவிருத்தித் திணைக்களம் கண்டும் காணாமலும் இருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குன்றும் குழியுமாக இருக்கும் இந்த வீதியூடாகப்பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமப்படுவதாகத் தெரியவருகிறது. இவ்வீதியை திருத்துவதற்கு தரம் குறைந்த உப்புக்கடல்கல் பறிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் வீதிகள் திருத்தப்பட்டாலும் சில மாதங்களிலேயே மீண்டும் சிதைவதற்கு வாய்ப்புண்டென்றும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வீதியை செப்பனிடவுள்ள வீதி அபிவிருத்தித் திணைக்களம் தரம் வாய்ந்த கற்களை கொண்டு வீதியைப் புனரமைக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (28)

## புங்குடுதீவு, இறுப்பிட்டிச் சந்தியில் முகாம் அமைக்க கடற்படையினர் எடுத்த முயற்சி மக்களால் முறியடிப்பு

(தீவகம்)

யாழ். தீவகத்தில் உள்ள புங்குடுதீவு இறுப்பிட்டி சந்திக்கு அண்மையாக புதியதொரு முகாம் ஒன்றை அமைப்பதற்கு கடற்படையினர் மேற்கொண்டு வந்த முயற்சிகளை அப்பகுதி மக்கள் ஒன்று திரண்டு தடுத்து நிறுத்தியுள்ளனர்.

கடந்த சில நாட்களாக மேற்படி பகுதியில் புதியதொரு முகாம ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். எனினும், இப் பகுதியில் படை முகாம் அமைப்பதை அப்பகுதி மக்களது இயல்பு வாழ்வினைப் பாதிப்பதால் அது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரியும், இதனைப் படையினர் கவனத்திற் கொள்ளாது தொடர்ந்தும் புதிய முகாம் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர்.

இதனால், ஆத்திரமடைந்த அப் பகுதி மக்கள் கடந்த புதன்கிழமை முகாம் அமைக்கும் முயற்சிகள் இடம்பெற்றுவரும் இடத்தில் கூடி அங்கு கடற்படையினர் மேற் கொண்டுவந்த புதிய முகாம் அமைக்கும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதனால் மக்களுக்கும், கடற் படையினருக்குமிடையே பெரும் வாக்குவாதம் இடம்பெற்றது. எனினும் மக்களது எதிர்ப்பு நியாயங்களை தாக்குப் பிடிக்க முடியாத படையினர் தமது புதிய முகாம் அமைப்பிற்கான முயற்சிகளை இடை நிறுத்தியுள்ளனர்.

இதேவேளை, மக்களது எதிர்ப்புக்களையும் மீறி கடற்படையினர் முகாம் அமைக்க முயற்சித்தால் அப் பகுதியில் பாரியளவிலான மறியல் போராட்டம் ஒன்றில் ஈடுபடப் போவதாகவும் மக்கள் மேலும் எச்சரித்துள்ளனர். (33)

## கோப்ரல் ராஜபக்ஷ சார்பில் ஆஜராக யாழ்.சட்டத்தரணிகள் மறுப்பு

1996/97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரியாலைப்பகுதியில் இளைஞர்களைக் கைது செய்து காணாமற் போகச்செய்த குற்றச் சாட்டில் முதலாம் எதிரியாக குறிப்பிடப்பட்ட கோப்ரல் ராஜபக்ஷ சார்பில், யாழ்.மேல் நீதிமன்றில் ஆஜராக யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் மறுத்துவிட்டது.

கிருஷாந்தி குமாரசாமி எனும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி மற்றும் அவரது தாய், சகோதரன், அயலவர் ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மரண தண்டனைக் கைதியாக உள்ள கோப்ரல் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆட்கொணர்வு மனுக்கள் சிலவற்றில் முதலாம் எதிரியாகவும் குறிப்பிடப்பட்டிருந்தார்.

இந்நிலையில் தன்னால் அரியாலைப் பகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற் போன இளைஞர்கள் சிலர் தொடர்பாக மேல் நீதிமன்றில் தன்னிலை வாக்கு மூலம் மொன்றை அளிக்க முன் வந்திருந்தார். அதற்கேதுவாக சட்டத்தரணியொருவரை நியமிக்கவும் அவர் கால அவகாசம் கோரியிருந்தார்.

அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டு மீண்டும் கடந்த வாரம் யாழ்.மேல் நீதிமன்றில் கோப்ரல் ராஜபக்ஷ ஆஜர் செய்யப்பட்ட வேளை சட்டத்தரணியொருவரை நியமிக்க மேலும் இருமாதகால அவகாசத்தை அவர் கோரியிருந்தார்.

இதை நிராகரித்த யாழ்.மேல் நீதிமன்ற நீதவான் கே.பி.எஸ் வரதராசா யாழில் உள்ள சட்ட உதவிகள் மையம் மூலம் சட்டத்தரணியொருவரை நியமிக்க சிபார்சு செய்ததுடன் யாழ். சிறைச் சாலையில் இவரை தடுத்து வைக்கவும் அப்போது பணித்திருந்தார்.

ஆயினும் அவர் சார்பில் யாழ் மாவட்ட சட்டத்தரணிகள் எவரும் ஆஜராக தயாராகவில்லையென கடந்த புதன்கிழமை மேல் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து தென்னிலங்கையில் இருந்து சட்டத்தரணியொருவரை எதிர்வரும் 30 ஆம் திகதியினுள் நியமிக்கவேண்டுமென அவருக்கு உத்தரவிட்ட நீதவான் அவரை மீண்டும் வெலிக்கடை சிறைச்சாலையில் அதுவரை தடுத்து வைக்கவும் உத்தரவிட்டார்.

இதேவேளை குறித்த 96/97 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரியாலை கிராமத்தில் காணாமற் போன இளைஞர்களை தான் பிடித்துச் சென்றதை நீதிமன்றில் அவர் பகிரங்கமாக ஒப்புக்கொள்வாராயின் அவர் சார்பில் யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் ஆஜராகுவது பற்றி பரிசீலிக்க இருப்பதாக தெரியவருகிறது. (27)

## கோப்பாய் பிரதேசசபையின் செயல் குறித்து மக்கள் கவலை

கைதடிப்பாலத்தில் இருந்து கோப்பாய்ச்சந்திவரை உள்ள வீதியின் இரு பக்கங்களிலும் நிறுவப்பட்டுள்ள கல்லரைக்கும் இயந்திரத் தூசிகளால் இப்பாதையூடாகப் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமப்படுவதாக தெரியவருகிறது. அனுமதியின்றி அரச காணிகளில் தனியார் சிலரால் அமைக்கப்பட்டுள்ள இந்த கல்லரைக்கும் சாலைகளில் இருந்து எழுப்பும் தூசுகளால் மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாவதாகத் தெரியவருகிறது.

மேலும் இப்பகுதி வெளிகளில் அனுமதியின்றிக் கொட்டப்படும் கழிவுப்பொருட்கள் மற்றும் ஆடு, மாடுவெட்டும் கழிவுகளால் இப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்பாதையூடாகப் பயணிக்கும் மக்கள் இத்துர்நாற்றத்தால் மூச்செடுக்க முடியாமல் திணறுவதாக தெரியவருகிறது. கோப்பாய் பிரதேசசபை இது குறித்து இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். தனியார் சிலரால் அரசகாணிகளில் நிறுவப்பட்டுள்ள கல்அரைக்கும் சாலைக்கு அனுமதி அளித்தது யார் என இப்பகுதி மக்கள் கோப்பாய் பிரதேச சபை மீது கேள்வி எழுப்புகின்றனர். சட்ட விரோதமாய் அனுமதியின்றி அமைக்கப்பட்ட ஆலைகளை மக்கள் இல்லாத இடத்திற்கு மாற்றம் செய்யும்படியும், குப்பைகளை, கழிவுகளை இப்பகுதியில் கொட்டுவதைத்தடுத்து நிறுத்தும் படியும் இப்பகுதி மக்கள் கோருகின்றனர். (28)

## மாலை நேர கல்வித்திட்டத்தை தீவக அரசியல் துறை ஆரம்பித்தது

(தீவகம்)


யாழ். தீவகத்தில் உள்ள புங்குடுதீவு பிரதேசத்தில் வாழும் வறிய மாணவர்களின் நன்மை கருதி தீவக கோட்ட அரசியல் துறையினரால் மாலை நேரக்கல்வித்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மற்றும் இடப்பெயர்வுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்துவரும் மாணவர்களின் கல்வி மேம்பாடுகளுக்காக இவ் இலவச மாலை நேரக்கல்வித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்பவைபவம் புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணியவித்தியாலயத்தில் அதன் அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இதில் புங்குடுதீவுப் பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் இசைச்செல்வன் இத்திட்டத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

தீவக கோட்ட அரசியல் துறையினரது ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு தேசிய எழுச்சிப்பேரவையினர் மற்றும் பொது அமைப்புக்கள், ஒன்றியத்தினர் பங்களிப்புகளை வழங்கி வருகின்றனர். (33)

# விமானங்களுக்குப் போன்று மனிதருக்கும் கறுப்புப் பெட்டி




("CPOD" கருவி)



ஒரு விமானம் சரியான முறையில் இயங்குவதை உறுதி செய்யவும் அதன் இயந்திரங்களில் ஏற்படும் கோளாறுகளை கண்டுபிடிக்கவும் கறுப்புப்பெட்டிகள் உதவுகின்றன. இதுபோன்ற கறுப்புப்பெட்டி மனிதனில் பொருத்தப்பட்டால்?

மனிதனில். பொருத்தக்கூடிய கறுப்புப்பெட்டி (கருவி) ஒன்றை நாசா நிறுவனம் தயாரித்திருக்கிறது. ஸ்ரான்ட் போட் (STAND FORD) பல்கலைக்கழக பேராசிரியரின் தலைமையிலான ஆய்வுக்குழு இது தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

விமான இயந்திரங்களில் ஏற்படும் கோளாறுகளைப் போன்று மனித உடலில் ஏற்படும் கோளாறுகளை(நோய்கள்) கண்டறிவது இக்கருவியின் பயன்பாடாகும். மாரடைப்பு நோய் போன்ற நோயினால் திடீர் மரணம் சம்பவிக்கும் ஒருவர் பற்றிய ஆய்வுகளை இக்கருவி பதிவுசெய்யும். எனவே திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் பணி அவசியமற்றதாகிறது.

மனிதர்களின் இதயத்துடிப்பு, அவர்களின் உயிருக்கேற்படப் போகும் அச்சுறுத்தல் என்பவற்றை இக்கருவி மிக இலகுவாகக் கண்டறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

அதேபோன்று குருதிச்சுற்றோட்டத்தில் அடங்கியுள்ள ஒட்சிசனின் அளவு, மற்றும் ஏனைய உயிரியல் மாற்றங்களையும் பதிவுசெய்யும் மிகச்சிறிய இக்கருவியைக் கைக்கடிகாரம் போன்று அணியலாம்; அல்லது இடுப்புப்பகுதிகளிலும் இதனை அணிந்துகொள்ளும் வகையில் இது தயாரிக்கப்பட்டுள்ளது. இது கணினி மவுஸ் (MOUSE) போன்ற வடிவத்தைக் கொண்டது. நித்திரையின் போதும் இதனை உடலில் பொருத்திக் கொள்ள முடியும்.

இதன்போது நமக்கு எவ்வித எழுது கருவிகளும் அவசியமாகாது. ஒரு முறை அணிந்தால் எட்டு மணித்தியால இடைவெளியில் ஏற்படும் உடலின் மாற்றங்களைப் பதிவு செய்து அறிவிக்கும்.

எனினும் இக்கருவி மனது தொடர்பான (கவலை, மகிழ்ச்சி, பீதி) தகவல்களை பதிவு செய்யமாட்டாது.

இரத்த அழுத்தம் தொடர்பாக ஏதாவது மாற்றம் நிகழும் போது உடனடியாக இக் கருவி ஒரு வகை ஒலியை எழுப்பும். அத்துடன் அவருக்கு தகுந்த சிகிச்சை அளித்து இயல்பு நிலை தோன்றும் வரை ஒலியெழுப்பியவாறே இருக்கும். 30 செக்கன்களில் இதற்குப் பரிகாரம் தேடாவிட்டால் மருத்துவ நிலையத்திற்கும் சமிக்ஞை தெரிவிக்கும் ஆற்றலையும் இக் கருவி கொண்டுள்ளது.

மனிதனுக்கு அளிக்கப்படும் சிகிச்சையின் பின்னர் உடலின் தன்மை பற்றியும் இக்கருவி மூலம் அறியமுடியும். இதனை விட நீச்சல் விளையாட்டின் போதும் மலை ஏறும் போதும் ஒருவரின் உடல் நிலை தொடர்பாக இன்னுமொருவருக்கு தகவலை வெளியிடும். இக்கருவியை நாசா மையம் சந்தைப்படுத்தியுள்ளது.

## எரிபொருளின்றி இயங்கும் விமானம்

கலிபோர்னியாவிலுள்ள நாசா நிறுவனத்தில் ட்ரைடன் ப்ளைட் (drydon flight) ஆய்வு நிலையத்தின் விஞ்ஞானிகள் குழு எரிபொருளின்றி பறக்கும் புதிய இலகு விமானம் ஒன்றை தயாரிக்க இருக்கின்றனர்.

எரிபொருள் பிரச்சினையாகியுள்ள இந்நாட்களில் லேசர் கதிர் மூலம் இந்த இலகு ரக விமானத்தை இயக்குவிப்பது அவர்களின் நோக்கமாகும்.

இதற்காக புவியில் இருந்து கிடைக்கும் லேசர் கதிர்களை பயன்படுத்த விஞ்ஞானிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதுவரை உருவாக்கப்பட்ட இவ்வகை விமானங்கள் 15 நிமிடங்கள் மட்டுமே வானில் சஞ்சரிக்கக் கூடியதாக விருந்ததால் கணிசமான நேரத்துக்கு பறப்பில் ஈடுபடச் செய்யும் ஆய்வுகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாக குழுவில் ஒருவரான டேவிட் புஷ் மேன் தெரிவித்துள்ளார்.

இதனை விட வான வெளியில் ஏற்படும் கால நிலைக்கேற்றவாறு அதாவது பலத்த காற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் வழிகளை ஆராய்ந்து வருகின்றனர்.

இவ்விமானம் கடல் மட்டத்திலிருந்து மிக உயரத்துக்கு பறக்கக் கூடிய வகையில் வடிவமைக்கப் படவிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது. நவீனதொழில்நுட்பத் திறன்களின் போட்டா போட்டியின் பயனாக இதைக் கருதமுடியும். இப்போது உருவாக்கப்பட்டுள்ள லேசர் முறையிலான விமானத்தின் தொழில்நுட்பத்திறன் மிக நுட்பம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இதனால் எதிர்காலத்தில் எரிபொருள் பாவனையில் பிரச்சினைக்கு முகம் கொடுக்கவுள்ள மனிதனுக்கு இத் தயாரிப்பு சற்று ஆறுதலைக் கொடுக்கும் என்பது தெளிவு.

## கிட்டவாசிப்பு பார்வையை பறிக்குமா?

புத்தகங்கள், பத்திரிகைகள் வாசிக்கும் போது கண்களுக்கு மிகவும் நெருக்கமாக வைத்து வாசிப்பதனால் கண்கள் பாதிக்கப் படலாம் என்று சமூக மட்டத்தில் நிலவிய அபிப்பிராயம் இப்போது விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப் பட்டுள்ளது. கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் கண்வைத்திய நிபுணர் டாக்டர் டக்ளஸ் பிரிடேரிக்கின் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வின் போது இந்த உண்மை கண்டுபிடிக்கப்பட்டதாக பிரிட்டிஸ் மொடிக்கல் ஜேர்னல் (BRITISH MEDICAL JOURNAL) மருத்துவ சஞ்சிகை கூறுகிறது.

புத்தகங்களை கண்ணுக்கு நெருக்கமாக வைத்து வாசிப்பதால் கண்பார்வை கெட்டுவிடவும், ஓரளவு காணப்படும் பார்வைக் குறைவு பெரிதாகுவதற்கும் வாய்ப்புண்டு என்று அந்த ஆராய்ச்சி நிரூபிக்கின்றது.

புத்தகங்கள், பத்திரிகைகளை முகத்திற்கு நெருக்கமாக வைத்து வாசிக்கும் போது எழுத்துக்களை அறிந்துகொள்ள புதிதாக முயற்சிப்பதாகவும் அதேநிலையில் பார்வையைத் தொடர்ந்து வைத்துக் கொண்டிருப்பதாலும் காலம் செல்லும் போது கிட்டப்பார்வை குறைந்துபோக இடமுண்டு என்றும் அந்த ஆய்வு மேலும் தெரிவிக்கின்றது.

## கச்சதீவு பற்றி

இத்தீவு மக்கள் குடியேற்றம் அற்ற பகுதியாக இருந்தபோதும் கலாசார, பொருளாதார, அரசியல் இராணுவ ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக விளங்கி வருகின்றது. இத்தீவின் கடற் பிராந்தியமானது கடல்வளப் பொருளாதாரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக இருப்பதாலேயே ஆரம்பம் முதலே இந்தியாவும் இலங்கையும் கச்சதீவை தமக்கே உரியது என உரிமை கொண்டாடின.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் 1921 இல் இருந்து வந்த கச்சதீவின் உரிமம் தொடர்பான பிரச்சினை 1974 இல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. 1974 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆம் திகதி இலங்கை-இந்திய அரசாங்கங்களின் உடன்பாட்டின் படி கச்சதீவு இலங்கைக்கு உரியதாக்கப்பட்டது. எனினும் இந்திய மீனவர்களும், யாத்திரிகர்களும் கடவுச்சீட்டுப் போன்ற பிரயாண ஆவணங்களின்றி இத்தீவுக்குப் போய் வரவும், இந்திய மீனவர்கள் கச்சதீவுப் பகுதியில் பாரம்பரியமாக அனுபவித்து வந்த உரிமைகளை தொடர்ந்து அனுபவிக்கவும் இவ்வுடன் படிக்கை அங்கீகாரமளித்துள்ளது.

சராசரியாக 1600 மீற்றர் நீளமும், 275 மீற்றர் அகலமும், 82 ஹெக்டயர் பரப்பளவும் கொண்ட இச் சிறியதீவு, தமிழீழத்தையும் தமிழ் நாட்டையும் ஊடறுத்துச்செல்லும் பாக்கு நீரிணையின் மையப்பகுதியில் நெடுந்தீவிலிருந்து 14.4 கிலோ மீற்றர் தொலைவில்-அமைந்துள்ளது. 1974 இன் பின்னர் இத்தீவு யாழ்ப்பாண மாவட்டத்தின் ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியுடன் இணைக்கப்பட்டது. சிறிலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகள், இப்பகுதியில் தமிழீழ மீனவர்கள் மீன்பிடித்தலை பல வருடங்கள் முற்றாகத் தடைசெய்து விட்டது. ஆனால் கச்ச தீவுப்பகுதியில் நிறைந்துள்ள கடல் வளங்கள் சிறிலங்கா பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டையும் மீறி இந்திய மீனவர்களால் தொடர்ந்தும் சுரண்டப்பட்டு வருகின்றன. இந்தியாவுக்கு இத்தீவும், அதன் கடற்சூழலும், எவ்வளவு முக்கியமோ, அதை விட தமிழீழ மீனவர்களுக்கு இத்தீவு கூடுதலான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. எமது மீனவர்களின் உயிர் நாடியே இக்கடற்பரப்புத்தான்.

## கல் சாப்பிடும் ஒட்டகம்

சவுதி அரேபியாவில் உள்ள ஆடு, மாடு ஒட்டகங்களுக்கு சாப்பிடுவதற்கு கல் கொடுக்கப்படுகின்றது. மினரல் சத்தைக்கொண்ட இந்தக் கல்லினை ஆடு, மாடு, ஒட்டகங்கள் நாக்கினால் நக்கி ருசித்துச் சாப்பிடுகின்றன. இதன் மூலம் அவைகளுக்கு உடலில் அதிகளவு போசாக்கு கிடைக்கிறது. இந்த மினரல் கல்லின் விலை 125 ரூபாவாகும்.

## நிறம் மாறும் ஓணான்கள்




சில அங்குலங்கள் வரை வளரக்கூடிய வீட்டுப்பல்லிகள் தொடங்கி பல அடி நீளம்வரை வளரக்டிய அமெரிக்காவின் இக்குவானா (IGUANA) இராட்சத ஓணான் வரை பல்லிகளில்தான் எத்தனை வகை! கீழே படத்தில் இருப்பது நமது வேலிகளிலும் புதர்களிலும் கரணப்படும் சாதாரண ஓணான்தான். இதுவும் பச்சோந்தி (CHAMELEON) ஓணான் போலவே நிறம் மாறக்கூடியது. ஓணான் அது நடமாடும் சூழலுக்கேற்ப தன்நிறத்தை மாற்றிக்கொள்வதாகவே பலரும் நினைக்கின்றனர். உண்மை அதுவல்ல. இந்நிறமாற்றம் ஓணானின் இச்சையின்றியே நடைபெறுகின்றது. ஒளி, வெப்பநிலை, கோபம்,பயம் என்பவற்றால் ஏற்படும் நரம்புத்தூண்டல் காரணமாகவே ஓணானின் உடல் நிறம் மாறுகிறது.

## சீனா தயாரித்துள்ள நீருக்கடியில் இயங்கும் றோபோ

கடல்வாழ் உயிரினங்கள் பற்றிய ஆராய்ச்சியினை மேற்கொள்ளுவதற்கென நீரிற்கடியில் இயங்கக் கூடிய றோபோவினை சீன விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்த றோபோ கடலில் 3500 மீற்றர் ஆழத்தில் இயங்கக் கூடியது. சீனாவிலுள்ள கடலோரம் ஒன்றில் நிறுத்தப்பட்டுள்ள கப்பலில் வைக்கப்பட்டிருந்த இந்த றோபோ கடந்த வாரம் இயங்க ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த றோபோவின் எடை 3.25 தொன். நீளம்3மீற்றர், உயரம் 1.8 மீற்றராகும். இதில் ஒரு கண்காணிக்கும் கருவி, மூன்று ஒளிப்படக் கருவிகள், நீருக்கடியில் இயங்கும் ஆறு விளக்குகள், உயிரினங்களை கண்காணிக்கும் கருவி ஒன்று என்பன பொருத்தப்பட்டுள்ளது.

## நடனமாடும் றோபோ



டோக்கியோவின் "சொனி" விஞ்ஞான ஆய்வு நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட றோபோக்களின் நடனக்காட்சி.

# மனித சுவாசச் செயற்பாடும் அதனைப் பாதிக்கும் காரணிகளும்

ஒரு மனிதனுடைய நுரையீரலில் 75 கோடி சிற்றறைகள் உள்ளன. நாம் நிமிடத்திற்கு 16 தொடக்கம் 18 தடவைகள் சுவாசிக்கின்றோம். பிரிமென்தகடு சுருங்கி விரிவதால் விலா என்புகள் மேல் நோக்கியும் முன்னோக்கியும் அசைகின்றன. இதனால் நாம் மூச்சை உள்ளெடுத்து வெளிவிடுகின்றோம்.

உயிர் வாழ்க்கைக்கு சுவாசம் என்பது பிரதானமானது, நுரையீரலுக்கு போதியளவு தூய காற்று கிடைக்காவிட்டால் சுவாசித்தலை இயக்கும் சுவாச உறுப்புக்களிற்கும், சுவாச மையத்திற்கும் பிராணவாயு அற்றுப் போவதால் மூச்சுத் திணறல் ஏற்படுகின்றது. மூச்சுத் திணறலிற்கு உடனடி கிசிச்சை மேற்கொள்ளாவிடின் இறப்பு நேரிடலாம்.

### மூச்சுத் திணறலுக்கான காரணங்கள்

- நீரில் மூழ்குதல்
- தூக்குப் போடுதல்
- தொண்டையை சுற்றியுள்ள தசை நார் வீங்குதல்

குறைவடைகின்றது.இவ் ஒட்சிசன் ஈடுசெய்யப்படாவிடின் இதனால் மூளையின் தொழிற்பாட்டில் பாதிப்பு ஏற்பட்டு மனக் குழப்பம் ஏற்படுகின்றது. இக்குழப்ப நிலையுடன் நீந்தும்போது மேலும் ஒட்சிசன் ($O_2$) கிடைக்கவில்லை என்றால் நீரில் மூழ்க வாய்ப்புள்ளது.

நீந்தும்போது அல்லது சுழியோடும்போது ஒட்சிசன் வாயு கிடைக்காவிட்டால் நெஞ்சடைப்பு, காதில் பேரிரைச்சல், பசி, பெருமூச்சுவிடல் போன்ற எச்சரிக்கை அறிகுறிகள் தென்படும். இதனைவிட களைப்பு, தசைப்பிடிப்பு, மயக்கம் போன்றவற்றாலும் நீரில் மூழ்க வாய்ப்புள்ளது. நீரில் மூழ்கியவர் பின்வரும் படி நிலைகளில் காணப்படலாம்.

- கைகால்களை அடித்தபடி தத்தளித்து கொண்டிருப்பார்.
- நீருக்கடியில் அசைவற்று இருக்கலாம்.
- நீரின் மேற்பரப்பில் முகம் கவிழ்ந்த நிலையில் காணப்படலாம்.

மீள உயிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

- கடலில் இருந்து தரைக்குக் கொண்டுவர தாமதமானால் படகில் வைத்தே சிகிச்சையினை மேற்கொள்ளலாம்.

### மீள உயிர்ப்பு நடவடிக்கை

- நபரிற்கு சுவாசம் அற்றுப்போய் இருந்தால் செயற்கை சுவாசம் கொடுக்க வேண்டும்.
- நாடித்துடிப்பு இல்லை என்றால் செயற்கை சுவாசத்துடன் வெளிமார்பு அமுக்கத்தையும் கொடுக்க வேண்டும்.

### விஷேட முதலுதவிச் சிகிச்சை

- நுரையீரலில் உள்ள நீர் முழுவதையும் அகற்ற நினைத்து நேரத்தை வீணாக்க வேண்டாம்.
- வாய், தொண்டை முதலியவற்றில் ஏதாவது அன்னிய பொருள் இருந்தால் அதனை அகற்ற வேண்டும்.
- நோயாளியை குப்புறப் படுக்க வைத்து வயிற்றை சுற்றி இரு கைகளாலும் தூக்குதல் வேண்டும்.
- நச்சு வாயுக்கள் சுவாசப்பாதையில் செல்லுதல

### நீரில் மூழ்கும் சந்தர்ப்பங்களும் அதற்கான முதலுதவி சிகிச்சை முறைகளும்

அண்மைக் காலமாக நீரில் மூழ்கி உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்து வந்துள்ளன. இதற்கான சந்தர்ப்பங்களை நோக்கினால்,

- நீந்துதல்
- சுழி ஓடுதல்
- கடற்பயிற்சி
- தற்கொலை முயற்சி
- தவறுதலாகவும், வலிப்பு

போன்ற நோய்களாலும் நீரில் மூழ்குவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. இதற்கான காரணங்களை ஆராய்ந்த போது,

- நீச்சல் தெரியாமை
- பாரிச வாதம்
- கடுமையான பயிற்சி
- மயக்கம், வலிப்பு போன்றவற்றுடன் சுழியோடுதல்
- கடற்பயிற்சி

போன்ற சந்தர்ப்பங்களுடன் கடலில் காணப்படும் கற்பாறைகளில் தலை அடிபடுதல், தலைக்காயம் ஏற்பட்டு சுயநினைவற்று நீரில் மூழ்கிய சம்பவமும் உள்ளது.

ஒருவர் தொடர்ந்து வேகமாக நீந்தும் போது மூழ்குவதற்கு சாத்தியக்கூறு அதிகம் உண்டு. ஏனெனில், விரைவாக நீந்தும்போது இரத்தத்தில் ஒட்சிசனின் ($O_2$) செறிவு

நீரில் மூழ்கியோரில் அனேகர் அதிகமாக நீரைக் குடிப்பதாலும், சுவாசப்பாதையில் நீர் உட்செல்வதாலும் உடலின் அடர்த்தி அதிகரிப்பதாலும் மிக விரைவில் நீரில் அமிழ்ந்து போகின்ற நிலை உள்ளது. மேலும் ஒருவர் நீரில் மூழ்கும்போது அவரின் நெஞ்சுச்சுவரில் நீரால் ஏற்படுகின்ற அமுக்க அதிகரிப்பு காரணமாக சுவாசப் பாதையில் உள்ள காற்று வெளியேற்றப்பட்டு நீர் உட்புகுகின்றது.

நீரில் மூழ்கும் ஒருவர் மூச்சுத் திணறல் ஏற்பட்டு கீழே போகும்போது, படிப்படியாக சுயநினைவை இழந்து இறுதியில் சுயநினைவு அற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றார். எனினும், சுயநினைவற்றாலும் மீள் உயிர்ப்பு நடவடிக்கையால் அவரைக் காப்பற்ற வாய்ப்புக்கள் உண்டு. இங்கு மூச்சுத்திணறலானது பயம் போன்றவற்றால் குரல்வளை சடுதியாகச் சுருங்குகின்றது.

கடலில் ஒருவர் மூழ்கும்போது அங்கு சுவாசப்பையில் உப்பு நீரானது அதிக செறிவாக இருப்பதனால் சுவாச பைக்குள் புகுந்து விடுகின்றது. இதனால், சுற்றோட்ட கனவளவு குறைக்கப்பட்டு மரணம் நிகழலாம். இதற்கு மாறாக நன்னீரில் மூழ்கும்போது சுவாசப்பையில் செல்லும் நீரின் செறிவானது இரத்தத்தைவிடக் குறைவாக இருப்பதனால் நீரானது இரத்தச் சுற்றோட்டத்தால் உறிஞ்சப்பட்டு கனவளவு அதிகரிக்கின்றது. இதனால் இரத்தக் கலங்கள் வெடிக்கின்றன. இங்கு இறப்பானது மூச்சுதிணறல் அல்லது இருதய தொழிற்பாடு செயல் இழப்பால் ஏற்படுகின்றது.

### முதலுதவிச் சிகிச்சை

- நீரில் இருந்து காப்பாற்றி தரைக்கு கொண்டு வந்தவுடன்
- செயற்கைச் சுவாச முறையைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

இதயத்தின் செயன்முறைக்கு வலுவூட்டும் பொருட்டு இதயத்தை வெளிப்புறமாக அழுத்திவிடும் செயன்முறை இதுவாகும். இவ்வாறு செயற்கை சுவாசம் செய்யும்போது நாடித்துடிப்பின் அளவை மணிக்கட்டில் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு நாடித்துடிப்பு பிடிபடாவிட்டால் வெளிப்புறமாக இதயத்தை அழுத்தும் இச்செயற்பாட்டை செய்தல் வேண்டும்.

நெஞ்செலும்பின் கீழ்ப்பாகத்தில் விரல்கள் படாவண்ணம் ஒரு உள்ளங்கையை வைத்தல் வேண்டும். அதன் மேல் மறுகையையும் வைத்து இரண்டு கைகளாலும் விட்டு விட்டு அழுத்துதல் வேண்டும். பெரியவர்களாயின் நிமிடத்திற்கு 60 தடவையும் சிறியவர்களாயின் 80 தட்வையும், குழந்தைகளாயின் 100 தடவையும் அழுத்துதல் வேண்டும். குழந்தைகளிற்கும், சிறுவர்களிற்கும் ஒருகையையோ அல்லது இரண்டு விரல்களையோ பயன்படுத்துதல் நல்லது. பாதிக்கப்பட்டவர் மூச்செடுக்கத் தொடங்கினால் அவரை 3/4 பாகம் குப்புறபடுக்க வைக்க வேண்டும்.

இவ்வாறான மீள உயிர்ப்பு நடவடிக்கைகளால் நீரில் மூழ்கி மூச்சு திணறல் ஏற்பட்ட ஒருவரைக் காப்பற்ற முடியும்.

**சி. ஜெயதீபன்**
(திருவையாறு)
பயிற்சி ஆசிரியர்,சென்ஜோன்ஸ்
முதலுதவிப்படையணி.

# வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவு ஜாதிக ஹெல உறுமய அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ள அரசாங்கத்தின் வரவு, செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்கப் போவதாக ஜாதிக ஹெல உறுமய அறிவித்துள்ளது. பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற கட்சித் தலைவர்களுக்கு இடையிலான கூட்டத்தின் போது, ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்னதேரர் இதனைத் தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான எதிர்க்கட்சிகளின் செயற்பாடுகளுக்கு துணைபோவதில்லையென தமது கட்சி தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்துள்ள அத்துரலிய ரத்ன தேரர், சனநாயகத்தை பாதுகாப்பதற்கும், பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கும் தமது கட்சி என்றும் பாடுபடுமெனவும் கூறியுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தை முடக்கும் வகையிலான விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் காரணமாகவே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனைகளுக்கு அமைய பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்திற்கோ, ஐக்கிய தேசியக் கட்சிக்கோ மக்கள் ஆணையை வழங்கவில்லை என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இடைக்கால நிர்வாகம் குறித்து மக்களுக்கு விளக்க ஐ.தே.க.முடிவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றி பொதுக்கூட்டங்களை நடத்தி மக்களுக்கு தெளிவுபடுத்த ஐக்கியதேசியக்கட்சி தீர்மானித்துள்ளது.

கொழும்பில் நடந்த அக்கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இடைக்கால நிர்வாகம் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இதைத் தவிர்த்து மாற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் பிரயோசனம் இருக்கப்போவதில்லை என ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ராஜிதசேனாரட்ண தெரிவித்துள்ளார்.

# கருணாவின் ஆதரவாளர் கைக்குண்டுத் தாக்குதலில் பலி

(மட்டக்களப்பு)

பொலநறுவை மாவட்டத்தின் கரப்பொல கிராமத்தில் நேற்று முன்தினம் காலை கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கதிரவெளியைச்சேர்ந்த குணரத்தினம்-சுபேந்திரன் (வயது 26) எனும் இளைஞரே உயிரிழந்தவராவார். இவர் கருணாவின் ஆதரவாளரென பொலிஸ் விசாரணையின் போது தெரியவந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிக்கந்த பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நோயாளியைப் பார்க்க வந்தவர்களை வைத்தியர் பிடித்துத் தள்ளினாராம்

## மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையீடு

கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபப் பெண் ஒருவரைப் பார்ப்பதற்காக வைத்தியசாலைக்கு வந்த அப்பெண்ணின் இரு மகள்மாரையும் வைத்தியர் ஒருவர் பிடித்து வெளியே தள்ளியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக காரைதீவைச் சேர்ந்த வயோதிபத் தாய் இராசேந்திரம் தங்கமுத்து கல்முனை மனித உரிமை ஆணைக் குழுவிடம் முறையிட்டுள்ளார். இது தொடர்பாக கல்முனைப் பிராந்திய மனித உரிமைகள் இணைப்பாளர் மனோகரனுக்கு மனுவொன்றை அனுப்பி வைத்துள்ளார். அம்மனுவில் குறிப்பிட்டிருப்பதாவது; கடந்த 28ஆம் திகதி சுகயீனம் காரணமாக கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன் என் மூத்த மகள் விடுதிக்கு வந்த போது வைத்தியர் இன குரோத வார்த்தைகளால் பேசி விரட்டினார். பின்னர் 30ஆம் திகதி எனது மற்றைய மகளான தாதியர் பயிற்சிக் கல்லூரி போதனாசிரியர் வந்த போது வைத்தியர் திட்டித் தீர்த்து என் மகளைப் பிடித்து வெளியே தள்ளியுள்ளார். இது மனித உரிமை மீறல் என முறையிடப்பட்டுள்ளது.

# 27 சிறுவர் பெற்றோரிடம் புலிகளால் ஒப்படைப்பு

தமது சுயவிருப்பின் பேரில் அமைப்பில் இணைய வந்த 25 சிறுவர்களை தமிழீழ விடுதலைப் புலிகள், அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதற்கான நிகழ்வு நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு கரடியனாறு அரசியல் செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இதேவேளை மன்னாரில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைய வந்த இரண்டு சிறுமிகளை மன்னார் அரசியல் துறையினர் அவர்களின் பெற்றோரிடம் கடந்த செவ்வாய்க்கிழமை ஒப்படைத்துள்ளனர்.

பேசாலை 4ஆம் வட்டாரத்தில் வசிக்கும் சிறுமிகள் இருவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைய வந்த சமயம் அவர்களது நிலைமைகளினை விசாரித்த மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்இனியவன், அவர்களது பெற்றோரை அழைத்து மன்னார் யுனிசெப் பிரதிநிதி முன்னிலையிலும், மன்னார் போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுவினர் முன்னிலை யிலும், மன்னார் அரசியல் துறைச் செயலகத்தில் வைத்து ஒப்படைத்தனர். அச்சமயம் மன்னார் மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளரும் சமுகமளித்திருந்தார்.

(மி)

# இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஒக்ரோபரில் பாராளுமன்ற விவாதம்

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு

இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்றை ஒக்ரோபரில் நடத்த கட்சித்தலைவர்கள் நேற்று முன்தினம் தீர்மானம் எடுத்துள்ளனர்.

முன்னர் இது தொடர்பான விவாதம் செப்ரெம்பரில் நடைபெற உத்தேசிக்கப்பட்டது. எனினும் ஜாதிகஹெல உறுமய கட்சியின் வேண்டுகோளுக்கிணங்க விவாதம் வரும் ஒக்ரோபர் மாதத்தில் மூன்று நாட்களில் நிகழ்த்துவதற்கு நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கூடிய, கட்சித்தலைவர்கள் முடிவெடுத்துள்ளனர்.

# அரச சேவையில் இணையும் பட்டதாரிகளுக்கு 3 மாதப் பயிற்சி

(கொழும்பு)

முதலாவதாக அரச சேவைகளுக்கு அமர்த்தப்படவுள்ள பட்டதாரிகளுக்கு இம்மாதம் 15 ஆம் திகதி முதல் மூன்று மாதங்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படும் என நிதிஅமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

புதிதாக வேலைக்கமர்தப்படும் பட்டதாரி மாணவர்களுக்கு மூன்று மாத பயிற்சிகள் வழங்குவதை அரசாங்கம் அத்தியாவசியமாக பிரகடனப்படுத்திஉள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வீரவணக்கம்

### 03 ஆம் ஆண்டு நினைவலைகளில்...

தாயின் மடியில் 26 ★ 04 ★ 1980



தாயக மண்ணில் 07 ★ 08 ★ 2001

தமிழீழ தேசியத் துணைப்படை வீரர்

**வே. சுதாகரன்**

நீராவிப்பிட்டி, முள்ளியவளை

கொக்குத் தொடுவாய்ப் பகுதியில் 07.08.2001 அன்று சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்தார். இம்மாவீரருக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"தமிழீழகாவல்துறை சிறப்புப்படையணியினா்"

(4881)

## வீரவணக்கம்

### 07 ஆம் ஆண்டு நினைவலைகளில்

தாயின் மடியில் 01 ★ 11 ★ 1977



தாயக மண்ணில் 07 ★ 08 ★ 1997

தமிழீழ காவல்துறைத் தலைமைக்காவலர்

**க.உதயச்சந்திரன்**

நி.மு. யாழ்.மாவட்டம்

த.மு. தேராவில் விசுவமடு

புளியங்குளம் பகுதியில் 07.08.1997 அன்று சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்தார். இம்மாவீரருக்கும், இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"தமிழீழ காவல் துறையினர்"

(4882)

# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வெற்றிடம்

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. பணிநிலை :- பண்ணை முகாமையாளர் [தரம்- 03]

தகைமை :- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் விவசாய விஞ்ஞானப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட விவசாயக் கல்வி நிறுவனமொன்றின் பொருத்தமான கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருப்பதுடன், பண்ணைமுகாமைத் துறையில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் பட்டறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

பண்ணை முகாமைத்துறையில் குறைந்தது ஏழு (07) ஆண்டுகள் பட்டறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

அகவை :- 30 ஆண்டுகளிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

மாதாந்த ஊதியம்:- $\frac{8,000 - 12,000}{200 \times 20} + 4,000$

02. பணிநிலை :- பண்ணை மேற்பார்வையாளர் [தரம் - 03]

தகைமை :- பண்ணை மேற்பார்வை தொடர்பில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டுகளிற்கு குறையாத பட்டறிவு உடையவராக இருக்க வேண்டும்.

அகவை :- 30 ஆண்டுகளிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

மாதாந்த ஊதியம:- $\frac{6,000 - 9,000}{150 \times 20} + 4,000$

மேற்காட்டப்பட்ட பணிநிலைகளுக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் திருநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக, நடுவப்பணியகத்திற்கு 2004.08.11 ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
02. ஏனைய தகைமைகளையும், பட்டறிவையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.
04. நற்சாட்சிப் பத்திரங்கள்.

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.9766)

# சிறில.விசேட அதிரடிப்படைக்கு 2060 பேர் சேர்க்கப்படுவர்

## -விசேட அதிரடிப்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் விசேட அதிரடிப்படைக்கு மேலும் இரண்டாயிரத்து அறுபது பேர் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

விசேட அதிரடிப்படையினர் (எஸ்.ரி.எவ்) கட்டளைத் தளபதி நிமால் லெவ்கே சென்ற திங்கள் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பங்கள் அடுத்தவாரம் பொலிஸ் தலைமையகத்தினால் கோரப்படும் என்றும், தெரிவு செய்யப்படுவோருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளதாக "டெய்லி நியூஸ்" ஆங்கிலப் பத்திரிகை கூறுகின்றது.

# மின்சாரசபை, எரிபொருள் கூட்டுத் தாபனத்திற்கு புதிதாக ஆட்களைச் சேர்க்க வேண்டாம்

## - சிறி. திறைசேரி இவ்விரு துறைகளுக்கும் அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா மின்சார சபைக்கும், எரிபொருள் கூட்டுத்தாபனத்துக்கும் புதிதாக பணிகளுக்கு ஆட்களை அமர்த்தவேண்டாம் என திறைசேரி இவ்விருதுறைகளுக்கும் அறிவித்துள்ளது.

இவைகள் பாரிய நட்டத்தில் இயங்குவதால் திறைசேரி இவ்வறிவித்தலை விடுத்திருப்பதாக நிதி அமைச்சர் சரத் அமுனுகம பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இத்திணைக்களங்கள் அரசின் மானியத்தில் இயங்குவதால், புதிய ஆட்சேர்ப்புச் செய்வதால், மேலும் சுமை அதிகரிக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தமிழீழ மாவட்ட நீதிமன்று–மன்னார்

வழ.:இல:– 219/03
தன்மை :– நானாவிதம்
பெறுமதி:– 10000/=

வழக்காளி:–
தாமோதிரம்பிள்ளை சரஸ்வதி,
குமுழமுனை,
பல்லவராயன்கட்டு.
–எதிர்–
எதிராளி:–
இராசையா வரதராசா (வரதன்),
கண்ணகிநகர்,
விசுவமடு.

## இடைக்காலத்தீர்வை

இந்த 2004 ஆம் ஆண்டு 07 ஆம் மாதம் 08 ஆம் நாள், மன்றின் நீதியாளர் திரு.செ.மயூரன் அவர்கள் முன்னிலையில், உரிய சட்ட ஒழுங்குப்படி வழக்காளியும் அவர் தரப்புச் சட்டத்தரணியும் சமுகமாயிருக்க வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதன்படி வழக்காளியினதும் அவர் தரப்பு முதலாம் சாட்சியினதும் சாட்சிக்கூற்றை பதிவு செய்த மன்று இடைக்காலத்தீர்வை பதியுமாறு அனுமதியளித்ததன் பிரகாரம் வழக்காளியின் உரிமைக்கோரிக்கையின்படி 20000/= வுக்கு முதலுக்கு மிஞ்சாத வட்டியைப்பார்க்கின்றபோது வழக்காளியால் எதிராளிக்கு செலுத்தப்பட்ட 30000/= வை கழித்து மிகுதி10000/= வை வழக்காளி எதிராளிக்கு கொடுக்கின்றபோது எதிராளியானவர் அதற்குப் பொறுப்பாகப் பெற்ற உறுதியை உடன் வழக்காளிக்கு வழங்கவேண்டும் என்றும், வழக்காளிக்கு ஏற்பட்ட வழக்குச்செலவையும் எதிராளியே செலுத்தவேண்டும் என்றும் இடைக்காலத்தீர்வை பதியப்படுகின்றது. இவ்விடைக்காலத்தீர்வை மன்றின் அனுமதியின்றி மாற்றம் செய்யப்பட முடியாததாகும்.

வரைந்தவர்:–
திரு. இரா.சரவணபவானந்தன்
வழக்காளியின் சட்டத்தரணி
பூநகரி/கிளிநொச்சி (சி.10062)

தி.செ.மயூரன்
நீதியாளர் அவர்கள்,
மாவட்ட நீதிமன்று,
மன்னார்.

## தீவிபத்து

(கொழும்பு)

நீர்கொழும்பு பெருந்தோட்ட மீனவ கிராமமொன்றில் ஏற்பட்ட தீவிபத்தொன்றில் மின்பிடிப் படகுகள் சேதமடைந்துள்ளதுடன் இரண்டு படகுகள் முற்றாக எரிந்துள்ளது.

இத்தீவிபத்திற்கான காரணங்கள் எதுவும் இதுவரைக்கும் கண்டுபிடிக்கப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகின்றது. இத்தீவிபத்து குறித்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 3000 பேருக்கு தொழில்வாய்ப்பு

(கொழும்பு)

தமிழ் மொழியில் உயர் சித்தியடைந்த மலையகத் தமிழ் இளைஞர் யுவதிகள் 3000 பேர்களுக்கு தொழில் வாய்ப்புகள் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

இதற்காக 8500 விண்ணப்பங்கள் அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளதென அமைச்சர் சி.பி ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இவர்களுக்கு சுகாதார திணைக்களம், கல்வித் திணைக்களம் ஆகியவற்றில் எழுது வினைஞர்கள் பதவிகள் வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## பாக். அரசு சிறி.இற்கு உதவி

(கொழும்பு)

சிறிலங்காவில் வரட்சியால் பாதிக்கப்பட்ட ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கென பாகிஸ்தான் அரசாங்கம் 8.5 மில்லியன் பெறுமதியான உணவுப் பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

மொனராகல, அநுராதபுரம், புத்தளம், அம்பாந்தோட்டை, பொலநறுவ ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வரட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்காகவே இந்த உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இப்பொருட்கள் அண்மையில் சிறிலங்காவின் மகளிர் விவகார சமூகநல அமைச்சர் திருமதி சுமேத ஜெயசேனவிடம் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பஸீர் வாலியினால் கையளிக்கப்பட்டன.

## புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இடையில் விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்படவுள்ளது.

இந்தத் தகவலை இரண்டு தரப்பும் உறுதி செய்துள்ளன.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் கவிழும் நிலையை தாம் அனுமதிக்கப் போவதில்லை என ஜாதிக ஹெல உறுமய தமது கருத்தை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே ஜாதிக ஹெல உறுமய ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பொது எதிர்க் கட்சியில் இணைந்து ஆளும் கட்சிக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

## கேள்வி அறிவித்தல்

இயக்கச்சி - பச்சிலைப்பள்ளி வீதி திருத்த வேலைக்கான கேள்விப் பத்திர, கேள்வி வைப்பு, பிணைப்பணங்கள் யாவும் யாழ்ப்பாணம், வீதி அபிவிருத்தித் திணைக்களப் பிரதம பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப்பெற்று, கேள்விப்பத்திரம் விநியோகிக்கப்பெறும். ஒப்பந்தம் செய்வதும் அவ்வலுவலகமே இவ்விடம் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளுதலும் குறிப்பிட்ட நாளில் திறப்பதுமேயாகும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(9776)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று–மன்னார்

வழக்கு இலக்கம்:–219/03
தன்மை:–நானாவிதம்
பெறுமதி :-10000/=

வழக்காளி:–
தாமோதிரம் பிள்ளை சரஸ்வதி,
குமுழமுனை.
பல்வராயன்கட்(
–எதிர்–
எதிராளி:–
இராசையா வரதராசா (வரதன்),
கண்ணகி நகர்.
விசுவமடு.

## பகிரங்க அறிவித்தல்

மேற்படி வழக்கில் எதிராளியாக இராசையா வரதராசா (வரதன்) கண்ணகிநகர் விசுவமடு என்பவருக்கு!

வழக்காளியால் உமக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீர் தோன்றி மன்றின் அனுமதியுடன் 13.02.2004 அன்று மறுமொழியளித்துவிட்டு, அதன்பின்னரான தவணைகளுக்கு மன்றில் தோன்றாமலும், தோன்றாமைக்கான காரணத்தை மன்றில் உரிய முறையில் தெரிவிக்காமலும் விட்டமையால், மன்று இவ்வழக்கை குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டப் படி ஒரு முகவிளக்கத்திற்கு தவணையிட்டு, 08.07.2004அன்று ஒரு முகவிளக்கத்திற்கு எடுத்து வழக்காளியின் உரிமைக்கோரிக்கையின்படி இடைக்காலத் தீர்வை பதிய அனுமதித்ததன் பிரகாரம் வரையப்பட்ட இவ்வறிவித்தலுடன் இணைத்து பகிரங்கப்படுத்தப்படுகின்றது. எனவே இவ் இடைக்காலத் தீர்வையை முற்றான தீர்வையாக்குவதில் உமக்கு ஆட்சேபனைகள் இருப்பின் அல்லது இத் தீர்வையை முற்றான தீர்வையாக்காது வழக்கு நடவடிக்கையை நீர் தொடர விரும்பின் இவ்வறிவித்தல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து 21 நாட்களுக்குள் மன்றில் தோன்றி உரியமுறையில் தெரிவிக்குமாறு மன்று உமக்கு சந்தர்ப்பம் தருகின்றது. தவறின் இவ் இடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்பட்டு உமக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இவ்வறிவித்தல் ஊடாக உமக்கு வெளிப்படுத்துகின்றோம்.

"மன்றின் கட்டளைப்படி"

வரைந்தவர்:–
திரு. இரா. சரவணபவானந்தன்,
வழக்காளியின்
சட்டத்தரணி,
பூநகரி/கிளிநொச்சி (சி10061)

திருக்குமார்,
பதிவாளர்,
தமிழீழமாவட்ட நீதிமன்று,
மன்னார்.

## 1ஆம் ஆண்டு நீங்கா நினைவில்

பிறப்பு
21 - 06 - 1976



இறப்பு
04 - 08 - 2003

### மகாலிங்கம் மகேஸ்வரன் (ரகு)

(உரிமையாளர், கலைவாணன் வெதுப்பகம்)

ஏழாலை மத்தி, ஏழாலை

திதி.07.08.2004


நிஜமான உன் முகமும்
கனவான உன் நினைவும்
நிதம் எம்மை வாட்ட
தாளாத சுமையோடும்
தளம்பாது நடக்கின்றோம்–நின்
நினைவெனும் தடமதில்

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

அம்மா, அண்ணா
தங்கை, தம்பிமார்

தகவல்:–
ம. ராசன்,
கலைவானன் வெதுப்பகம்,
விசுவமடு. (சி4869)

# ருடெல்வ்-நிக்கிபோயே சிறப்புத்துடுப்பாட்டம் காலி டெஸ்ட் போட்டி சமநிலை நோக்கி?





சிறிலங்காவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் சிறிலங்கா அணிக்கும் இடையில் காலியில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது தென்னாபிரிக்கா ஏழு விக்கெட்டுக்களை இழந்து 347 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

விக்கெட் இழப்பின்றி 82 ஓட்டங்களுடன் நேற்றுக்காலை தமது ஆட்டத்தை ஆரம்பித்த தென்னாபிரிக்கா 87 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த டிப்பென்னார் ஆட்டமிழந்தார். தொடர்ந்து கிளான் காஸ்ரல் 37,கலிஸ்59 ஸ்சிமித் 23,பவுச்சர்6,பொலக் 25, குளூஸ்னர்2 ஓட்டங்களையும் முறையே பெற்று ஆட்டமிழந்தனர்.

ருடெல்வ் 87 ஓட்டங்களையும் நிக்கி போயே 31 ஓட்டங்களையும் முறையே ஆட்டமிழக்காது பெற்றுக்களத்தில் இருந்தனர். பந்து வீச்சில் முரளிதரன், சனத்ஜெயசூரியா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் சமிந்தவாஸ்,டில்சான் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

முன்னதாக சிறிலங்கா அணி முதலாவது இனிங்சில் 486 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஜெயவர்த்தன 237, சமிந்தவாஸ்69,குமார் சங்கக்கார 58 ஓட்டங்களை அதிகமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பொலக் 48 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இப்போட்டியில் சிறப்பாக ஆடிவரும் தென்னாபிரிக்க அணி இன்று 400 ஓட்டங்களுக்கு மேல் பெற்றுக் கொள்ளுமாயின் இப்போட்டி பெரும்பாலும் வெற்றி தோல்வியற்ற முடிவைத்தருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கரின் மவுசு இந்தியாவில் குறைந்து வருகிறது

-முனால் பதாதன்



இந்தியாவின் மிக முக்கியமான கிரிக்கெட் வீரராகக் கருதப்பட்டு வரும் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரின் 'மவுசு' இந்தியாவில் குறைவடைந்து வருவதாக கிரிக்கின் போ என்ற வெப் தளத்திற்குச் செய்திகளை வெளியிட்டு வருகின்ற முனால் பதாதன் ரொய்ட்டரில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.

குறிப்பாக அந்த இடம் தற்போது ராகுல்ராவிட்டுக்கு மாறிக் கொண்டு போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நிறைவடைந்ததன் பின்னர் எந்தவொரு முக்கியமான போட்டியிலும் சச்சின் டெண்டுல்கர் நின்று நிலைத்து ஆடுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகி வருகின்றார். இப்போது இந்தியாவின் ரசிகர்கள் மத்தியிலும் இவ்வாறான குற்றச்சாட்டு எழும்பியுள்ளது.

ஆனாலும் சாதாரண மனிதராகத் திகழும் ராகுல்ராவிட் டெண்டுல்கரின் இடத்துக்கு முன்னோக்கிச் சென்றுகொண்டிருப்பதாகவும் பதாதன் தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

-ஆசியக்கிண்ண கால்பந்து இறுதிக்கட்டம்-

# மூன்றாம் இடத்திற்கான போட்டி இன்று பலமான இறுதிப்போட்டி நாளை



ஆசியக்கிண்ண கால்பந்து போட்டிகள் நாளை நடைபெறும். யப்பான், சீனா அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியுடன் நிறைவடைகின்றது.

இதற்கிடையில் மூன்றாம் இடத்திற்கான போட்டி இன்று ஈரான் பஹ்ரெயின் அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளது.

நாளை நடைபெறும் இறுதிப்போட்டியில் போட்டியை நடாத்தும் சீன அணி பலமான யப்பான் அணியுடன் மோதுவதால் மிகப் பெரும் போட்டியாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் இங்கிலாந்து ஹொக்கி அணி தங்கம் வெல்லும்

- அணிப் பயிற்சியாளர்




எதிர்வரும் 13ஆம் திகதி கிரேக்கத் தலைநகர் எதென்சில் ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் தமது அணியினர் தங்கப்பதக்கத்தை வெற்றி கொள்வார்கள் என இங்கிலாந்தின் ஹொக்கி அணிப் பயிற்றுவிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு நடைபெற்ற யூரோ 2004 ஹொக்கி போட்டியில் சம்பியன்பட்டம் வென்ற இங்கிலாந்து அணியினருக்கு இது கடினமான காரியமாக இருக்காது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஒலிம்பிக் போட்டிகளில் முதன்மைப் பதக்கத்தை வெல்வதற்கென்றே தமது அணியினர் கடும் முயற்சிகளிலும் பயிற்சிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளனர். மேலும் ஒலிம்பிக் போட்டித் தொடரில் தாம் சந்திக்கும் அணிகளுடன் ஒப்பிடுகையில் எமது அணியே திடகாத்திரமாகவுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.



எதென்ஸ் போட்டிகளில் பங்கேற்கச் செல்லக் காத்திருக்கும் அவுஸ்திரேலிய ரக்பி அணி வீரர்கள், இடமிருந்து வலமாக பிரன்டன் கணன், மத்தியூ பர்க், பயிற்றுநர் எடிஜோன்ஸ், அணித்தலைவர் ஜோர்ஜ் கிரகன் ஆகியோர்.

# இந்தியக் கிரிக்கெட் குழாமில் மீண்டும் அகார்கர் சஹிர்கான் நீக்கம்; தினேஷ்கார்த்திக்கிற்கு வாய்ப்பு

நெதர்லாந்தில் நடைபெறவுள்ள மூன்று நாடுகள் பங்கேற்கும் போட்டி மற்றும் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள நாட்வெஸ்ட் ஒருநாள் போட்டிகளுக்கான 15 பேர் கொண்ட இந்தியக் கிரிக்கெட் அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இதில் காயமடைந்துள்ள சஹிர்கானுக்குப் பதிலாக வேகப் பந்து வீச்சாளர் அகார்கர் சேர்க்கப்பட்டுள்ளார். மற்றும் விக்கெட் காப்பாளர் பார்திப்பட்டேலுக்குப் பதிலாக தமிழகத்தைச் சேர்ந்த தினேஷ்கார்த்திக் இடம்பெற்றுள்ளார். தவிர துடுப்பாட்டவீரர் ரோகன் கவாஸ்கர் ஆகியோரும் 15 பேர் குழுவில் இடம்பெற்றுள்ளனர். இதில் கவாஸ்கர் தவிர மற்ற அனைவருமே இங்கிலாந்து நாட்வெஸ்ட் போட்டியில் பங்கேற்பார்கள். இந்தத் தகவலை கிரிக்கெட் சபை செயலாளர் எஸ்.கே நாயர்அறிவித்தார். மேலும் வீரர்கள் போட்டிகளில் வெளிப்படுத்தும் திறமையின் அடிப்படையிலும் மற்றும் தலைவர் மற்றும் பயிற்சியாளர்கள் ஆகியோர்களின் ஆலோசனையின் பேரிலும் அணியில் சேர்க்கப்படுவார்கள என்றும் நாயர் தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்தில் நடைபெறவுள்ள மூன்று நாடுகள் போட்டியில் இந்தியா ,அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகள் கலந்து கொள்கின்றன. இப்போட்டி இம்மாதம் 21 முதல் 29 வரை நடைபெறவுள்ளது. அடுத்ததாக இங்கிலாந்தில் செப்டம்பர் மாதம் 1ஆம் திகதி முதல் 5ஆம் திகதிவரை நாட்வெஸ்ட் கோப்பைக்கான ஒருநாள் போட்டி நடைபெறவுள்ளது. இதில் மொத்தம் 3 போட்டிகள் நடைபெறவிருக்கிறது.

ஐரோப்பிய சுற்றுப் பயணத்திற்கான இந்திய அணி இம்மாதம் 17ஆம் திகதி மும்பையிலிருந்து புறப்படும் என்றும் நாயர் குறிப்பிட்டார். மேலும் இங்கிலாந்தில் நடைபெறும் ஐ.சி.சி. மினி உலகக் கிண்ண போட்டியில் ரோகன் கவாஸ்கர் தவிர நெதர்லாந்து போட்டியில் பங்கேற்ற அதே அணிதான் பங்கேற்கும் என்றும், அப்போட்டியின் விதிமுறைப்படி 14 வீரர்களுக்குத்தான் அனுமதி கிடைக்கும் என்றும் இப் போட்டி செப்டம்பர் 10முதல்25 வரை நடைபெறும் என்றும் நாயர் கூறினார்.



-உலக பெண்கள் டென்னிஸ் தரவரிசை-

# டேவன் போர்ட்டுக்கு இரண்டாவது இடம் முதல் இடத்தில் தொடர்ந்தும் ஹெனின்


உலக பெண்கள் டென்னிஸ் தரப்பட்டியலில் அமெரிக்க வீராங்கனை லின்ட்சே டேவன் போர்ட் இரண்டாவது இடத்திற்கு முன்னேறினார்.

இந்த வாரம் சான்டிகோவில் பெண்கள் டென்னிஸ் போட்டிகள் நடைபெற்றன. இதில் ஒற்றையர் பிரிவில் அமெரிக்க வீராங்கனை லின்ட்சே டேவன்போர்ட் கலந்து கொண்டார்.

அவர் பிரெஞ்ச் ஓபன் சம்பியனும் ரஷ்ய வீராங்கனையுமான அனஸ்டாகியா மிஸ்கினாவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார் இதன் மூலம் அவர் கூடுதல் புள்ளிகளைப் பெற்று தரப்பட்டியலில் இரண்டாவது இடத்திற்கு முன்னேறினார்.

1.ஜஸ்டின்ஹெனின்(பெல்) 4916 புள்ளிகள், 2. லின்ட்சே டேவன்போர்ட் (அமெரிக்கா) 4274, 3. அமெலி மௌரெஸ்மோ (பிரான்ஸ்) 4031, 4. மிஸ்கினா (ரஷ்யா) 3996, 5. கிம்கிளிஜ்டர்ஸ் (பெல்ஜியம்) 3920, 6. எலினா டெமன்டிவா (ரஷ்யா) 3177, 7.ஜெனிபர் கேப்ரியாட்டி (அமெரிக்கா) 2595, 8. மரியா ஷரபோவா (ரஷ்யா) 2470, 9. சுவிட்லான குஜ்னெட்கோவா (ரஷ்யா) 2105, 10. செரினாவில்லியம்ஸ் (அமெரிக்கா) 1995, 11.அய்சுஜியாமா (யப்பான்) 1968, 12. வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) 1952, 13.பேகியாசுவாரெஜ் (ஆர்ஜென்டினா) 1945, 14. வெரா ஜொனரெவா (ரஷ்யா) 1941, 15. நாடியா பெட்ரோவா (ரஷ்யா) 1769, 16.பட்டிஷிண்டன் (சுவிட்சர்லாந்து) 1609, 17. பிரான்செஸ்கா ஷியாவோன் (இத்தாலி) 1467.

## சிந்தனைக்கு



மொழி,கலை, கலாசாரம் என்பன ஒரு தேசியஇனத்தின் கட்டமைப் பிற்குத்தூண்களாக விளங்கு கின்றன; ஒரு தேசியத்தின் ஆன்மா வாகத் திகழ்கின்றன; ஒரு தேசிய நாகரிகத்திற்கு அத்திவாரமாகின்றன.

தமிழீழ்தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 7-08-2004

மின் அஞ்சல்
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
Daily@ eezhanatham .com
natham 2 3ela @Yanoo.com

## பொறுத்தது போதும்...!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதாகச் சனாதிபதி சந்திரிகாவிடமிருந்து அறிவிப்பொன்று வெளிவந்துள்ளது. இருப்பினும் இம்முடிவிற்குச் சனாதிபதி சந்திரிகா வந்துள்ளமை திடீரானதொன்றாகவோ, அவசரப்பட்ட தொன்றாகவோ ஒருபோதும் இருப்பதற்கு வாய்ப்பில்லை.

ஏனெனில் ஐ.ம.சு முன்னணித் தலைவி என்ற முறையில் சனாதிபதி சந்திரிகா பெருமைப்பட்டுக் கொள்வதற்கு எதுவுமேயில்லை. மாறாகச் சிறுமைப்படுவது போலவே பல விடயங்கள் நிகழ்ந்தேறியுள்ளன. ஒரு வகையில் பார்த்தால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி என்ற நிலையில் இருந்தே இறங்கி வரவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டதெனலாம்.

ஜே.வி.பி.யுடனான கூட்டு, ஆரம்பம் முதலே சனாதிபதி சந்திரிகாவிற்கு நெருக்கடியையும், அதிருப்தியையும் கொடுப்பதாகவே இருந்து வந்திருப்பினும்; நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டு பாராளுமன்ற ஆட்சி முறை அமுல்படுத்தப்படுதல் மூலம் அரசியலில் தொடர்ந்து தான் பங்கேற்க வேண்டும் என்பதற்காகவே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பி உடனான கூட்டொன்றிற்கு உடன்பட்டார். அதாவது அரசியல் யாப்பு மாற்றத்திற்கு ஜே.வி.பி யின் அனுசரணை அவசியம் எனஅவரால் கருதப்பட்டது. ஆனால் ஜே.வி. பி யுடனான கூட்டு எதிர்பார்த்த அளவில் பயன் கொடுக்காதது மட்டுமல்ல, எதிர்மறையான விளைவு களையுமே சந்திக்க வேண்டியதாக்கியது.

அதாவது அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கான வாய்ப்பு தற்போதைக்கு இருப்பதாக இல்லை. அறுதிப்பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத அரசாங்கம் எவ்வாறு அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள முடியும்?

இதனைத் தவிர தற்பொழுது சந்திரிகா குமாரதுங்கவை ஜே.வி.பி யின் நடவடிக்கைகள், பேச்சுக்கள் வாட்டிவதைக்கத் தொடங்கியுள்ளதெனலாம். அதாவது சனாதிபதி சந்திரிகாவைச் சிறுமைப்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக அமைந்த ஜே.வி.பியின் பேச்சுக்கள்/ அறிவிப்புக்கள் என்பனவும் சனாதிபதி சந்திரிகாவின் இத்தகைய முடிவிற்கு அதாவது இராஜினாமாவுக்கு காரணமாக இருக்கலாம்.

எடுத்துக்காட்டாக அண்மைய காலத்தில் சனாதிபதியின் நடவடிக்கைகள் அனைத்தையும் ஜே.வி.பி விமர்சித்தது அன்றி எதிர்த்தது என்பதற்கப்பால், அரசாங்கத்திற்கு குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் சனாதிபதிக்கும் எச்சரிக்கை விடும் வகையிலும் நடந்துகொண்டது. இது அமைச்சரவை அமைப்பதிலிருந்து இனப்பிரச்சினைக்கான தீர்வான இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான விவகாரம் வரையில் தொடர்வதாகவே இருந்தது.

ஜே.வி.பியின் இந்நடவடிக்கையானது ஒரு வகையில் சனாதிபதி சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரத்திற்குக் கூட எல்லையிடுவது போன்றதாகியது. இது சனாதிபதி சந்திரிகாவின் பொறுமையைச் சோதிக்கும் ஒன்றாக இருந்தது எனின் மிகையாகாது. அதாவது அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தல் என்ற ரீதியில் சனாதிபதியின் அதிகாரத்தை ஜே.வி.பி கட்டுப்படுத்துவது போன்று செயற்பட்டமை சனாதிபதிக்குச் சீற்றத்தினைக் கொடுத்திருத்தல் வேண்டும்.

அடுத்ததாக ஜே.வி.பியின் நடவடிக்கையானது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும், சனாதிபதி சந்திரிகாவின் அரசியல் எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்குவதாக மாறியிருந்தது எனினும் தவறாகமாட்டாது. அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சியினதும், சந்திரிகா குமாரதுங்க மீதானதுமான நம்பகத் தன்மையை ஜே.வி.பியின் நடவடிக்கைகள் குறைக்கும் வகையிலானதாக அமைந்திருந்தன.

இத்தகையதொரு நிலையில் தான் சனாதிபதி சந்திரிகா ஐ.ம.சு முன்னணியின் தலைமைப்பதவியிலிருந்து விலகியுள்ளார். சனாதிபதியின் இம்முடிவானது ஒரு வகையில் அவருக்கு அனுகூலமானதே. அதாவது கட்டுக்களிலிருந்து அவர் விடுபடுவதற்கு வாய்ப்பளிக்கிறது. சுருக்கமாகக் கூறுவதானால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு ஜே.வி.பிக்கு விளக்கமளிக்க வேண்டிய தேவை அவருக்கு இருக்கமாட்டாது.

இதேவேளை சனாதிபதி சந்திரிகா இப்பதவியை இராஜினாமாச் செய்தமையானது அவர் சுயமான நடவடிக்கைகளுக்கு இறங்குவதற்குத் தயாராகலாமென்ற அபிப்பிராயத்தையும் தோற்று விப்பதாகவுள்ளது. அதாவது கூட்டணிக் கட்சியால் பயன் இல்லை என்ற ரீதியில் சுயமான முடிவுகள் சிலவற்றிற்கு செல்ல அவர் தீர்மானிக்கலாம். அவ்வாறு இல்லாதுவிடினும் கூட சனாதிபதி தனது சுயகௌரவத்தைக் காத்துக்கொள்ள இது அவசியமாகும்.

-விளக்குவைத்த குளப் பகுதியில்-

# தமிழீழக் காவல் துறையினருடன் கண்காணிப்புக் குழு சந்திப்பு



(அலுவலகசெய்தியாளர்)

தமிழீழக் காவல் துறையின் முன்னரங்க காவல் துறை சிறப்புத் தளபதி மற்றும் விளக்குவைத்த குளப் பகுதிப் பொறுப்பாளர் மாறன ஆகியோரை போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழுவினர் ஆகியோருக் கிடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

நேற்றுக்காலை 10.00 மணியள வில் விளக்குவைத்த குள முன்ன ரங்க காவலரண் பகுதியில் வைத்து நடைபெற்ற கலந்துரையாடலில் தமிழீழக் காவல்துறை சிறப்பு படை யணிகளின் தளபதி இரா. மகேந்தி விளக்குவைத்த குளப்பகுதிப் பொறுப்பாளர் மாறன் ஆகியோ ரும் கண்காணிப்புக் குழுவின் தரப்பில் அதன் பிரதிநிதிகளான கிறிஸ்டன், கிளிங்டன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இச் சந்திப் பின் போது முன்னரங்க காவல ரண் தொடர்பாக கலந்துரையா டல் இடம்பெற்றதாக தெரிய வந்துள் ளது. (சோ.கு)

# யாழ்.பத்திரிகை விற்றவர் மீது கொலை முயற்சி வழக்கு விசாரணையை கொழும்பிற்கு மாற்றத் திட்டம்

யாழ்.நகரப்பகுதியில "ஈழ நாதம்" பத்திரிகை விற்றுக்கொண் டிருந்தவர் மீது மேற்கொள் ளப்பட்ட கொலை முயற்சி தொடர் பான வழக்கு விசாரணைகளை யாழ்.நீதி மன்றிலிருந்து கொழும்பு நீதிமன்றிற்கு மாற்றஞ்செய்ய முயற்சிகள் குற்றஞ்சாட்டபட்ட படையினர் சார்பில் படைத்தரப்பால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் மேற்படி கொலை முயற்சி குறித்து யாழ். நீதிமன்றில் இடம் பெற்று வரும் சுருக்க முறையற்ற விசாரணை களை எதிர்வரும் 23ஆம் திகதி வரை பிற்போடுமாறு மேன்முறை யீட்டு நீதிமன்று அறிவித்துள்ளது.

இதனிடையே பாதிக்கப்பட்டவர் சார்பில் மேற்படி வழக்கு விசார ணைகளை கொழும்பிற்கு மாற்று வதற்கு ஆட்சேபம் தெரிவித்து சட்டத்தரணி என் ஸ்ரீகாந்தா மேன் முறையீட்டு நீதிமன்றில் மனு வொன்றைத் தாக்கல் செய்யவுள் ளார்.

மறுபுறத்தே 18 வயதிற்கும் குறைவான வயதுடையவர் வழக்கு விசாரணைகளுக்கென வேறு நீதிமன்றிற்கு அழைக் கப்படின் அவர் உளவியல் ரீதியா கப் பாதிக்கப்படலாமென கருத்துத் தெரிவித்துள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் யாழ்.அலுவலகப் பிரதிநிதிகள் இவ்விடயத்தில் தாக்குதலுக்கு உள்ளா னவர் சார்பில் சட்ட நடவடிக்கை களை எடுக்கமுற்பட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன் னர் யாழ். நகரப்பகுதியில் "ஈழ நாதம்" பத்திரிகை விற்றுக்கொண் டிருந்தவர் மீது மத்திய பேருந்து நிலையப் பகுதியிலுள்ள காவலரணில் கடமையில் இருந்த படையினர் திட்டமிட்டு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டிருந்த மையும் அதனால் பத்திரிகைவியா பாரியும் தனியார் பேருந்து நடத்து னர் ஒருவரும் காயமடைந்திருந்த மையும் குறிப்பிடத்தக்கது. (27)

# இ.நி.யோசனையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு தயாரில்லை!

-ஜே.வி.பி.பிரச்சாரச் செயலர் விமல்வீரவன்ச

இடைக்கால நிர்வாக யோசனை களை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்ட மைப்பு அரசாங்கம் தயாரில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கூறியுள்ளார். சனா திபதியும் இது தொடர்பாக நிறை வேற்று குழுக் கூட்டத்தில் தெரிவித் துள்ளார் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இடைக்கால யோசனைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தனி ஈழஇராச்சியம் உருவாகுவ தைத் தடுக்க முடியாது என்று மாத்தறையில் நேற்றுமுன் தினம் தேசிய பற்றுனரின் தேசிய இயக்கக் கூட்டத்தில் பங்கு பற்றிய அவர் கூறியுள்ளார்.

இடைக்கால யோசனை வேறொரு நிர்வாக அரசாங்கத் திற்கு ஒப்பானது. கூட்டமைப்பு அர சாங்கம் இதனை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தை மேசை யில் அமராது.

சனாதிபதி அண்மையில் இதனை நிறைவேற்று குழுக் கூட்டத்தில் கூறினார். அவரே கூறி விட்டார். பிறகு என்ன. ஆனால் இதனை அடிப்படையாகக் கொண்டு தான் பேச்சுவார்த்தைகளை நடத்து வோம் எனக் கூறுகிறார்கள். இடைக கால நிர்வாக தன்னாட்சி அதிகார சபை என்று கூறுவது எதற்காக?

அப்படி என்றால் தனிஈழமாகும் இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகார சபை மூலம் வேறு இனம் சுயநிர்ணய உரிமை, தனியான தாயகம் என்று குறிப்பிடப்பட்டிருக் கின்றது.

இதனை அடிப்படையாக கொண்டு பேச்சுவார்த்தைகள் நடத் துவது என்றால் அது தனி ஈழத்தை வழங்குவதே ஆகும். வேறு ஒன்றுமே இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகாரசபை என்ற ஐசிங்கை வைப்பதானால் கேக் ஈழமாகும்.

இடைக்கால தன்னாட்சி அதி காரசபை மூலம் வேறு இனம் சுய நிர்ணய உரிமை தனியான தாயகம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனை அடிப்படையாக வைத் துப் பேச்சுவார்த்தை நடத்துவதென் றால் அது ஐசிங் போன்றதே ஒழிய வேறொன்றுமில்லையெனவும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித் துள்ளார். (32)

# வடமராட்சி கடற்பரப்பில் ஊடுருவிய 4 இந்திய இழுவைப் படகுகள் பிடிபட்டன

வடமராட்சி கடற்பரப்பில் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்ட 4 இந்திய இழுவைப் படகுகள் நேற்று முன் தினம் மாலை கடற்படையினரால் பிடிக்கப்பட்டுள்ளன.


அண்மைக்காலமாக அதிகரித்து வரும் இந்திய மீன்பிடி இழுவைப் படகுகள் நடமாட்டம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் நேரடியாக அழைக்கப் பட்டு நேற்று முன்தினம் காலை வடமராட்சிப் பகுதி மீனவ சங்கப் பிரதிநிதிகளால் காண்பிக்கப் பட்டது.

இது தொடர்பாக அறிவித்த தையடுத்தே கடற்படையினர் இந் நான்கு இழுவைப் படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றிச் சென் றுள்ளனர். இவற்றிலிருந்து 25 இந்திய மீனவர்களும் நேற்று மல் லாகம் நீதிமன்றில் ஆஜர் செய் யப்பட்டனர். படகோட்டிகளான நான்கு மீனவர்களை வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டதுடன் ஏனைய 21மீனவர்களையும் சிறிலங்கா கடற்படை ஊடாக இந்திய கடற் படையினரிடம் ஒப்படைக்கு மாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (27)

# சிறுமியை பாலியல் ரீதியாகத் துன்புறுத்திய பிக்குவுக்கு 15 வருட சிறைத்தண்டனை

சிறுமி ஒருவரை பாலி யல் ரீதியாகத் துன்புறுத்திய குற்றச் சாட்டின் பேரில் நீதிமன்றத்தால் ஆஜர் செய்யப்பட்ட பௌத்த பிக்கு ஒருவருக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றம் 15 வருட சிறைத் தண்டனை விதித்ததுடன் 7500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள் ளது. அத்துடன் பாதிக்கப்பட்ட சிறு மிக்கு 50,000 ரூபா நஷ்ட ஈடாக வழங்குமாறும் நீதவான் உத்தர விட்டார்.அபராத தொகையையும், நஷ்டஈட்டுத்தொகையையும் பௌத்தபிக்கு செலுத்தா விட்டால் மேலும் நான்கு வருடங்கள் சிறைத் தண்டனைகளுடன் 15 வருடகடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். கொழும்பை அண்டிய பிரதேசத்தில் பிரிவேனா ஒன்றில் வசித்து வந்த பட்டதாரி ஆசிரியர் அவர் என கூறப்பட்டுள்ளது.

# விசேட உந்துகணை செலுத்தி பயிற்சி நிறைவு நிகழ்வில்...



## பசுபிக்பிராந்திய....

வலிந்து புகுத்தி வருகின்றன.

தமிழ் மக்களது அடிப்படை மனித உரிமைகளை பேணிப் பாதுகாக்கப் போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பேரினவாதத் தீயில் தமிழ் மக்களை கருக்க முனைந்த சிறிலங்கா அரச படைகளுக்கும் இடையிலான இராணுவச் சமபலத்தினை தவறாகக் கையாளுவது அதாவது சிறிலங்கா அரச படைகளுக்கு பல்வேறு வகைகளிலும் உதவுவதானது பேரினவாதத்திற்குத் துணை போவதாகவே அமையும்: நிரந்தர சமாதானத்திற்கான முன்னெடுப்புக்களை தடம் புரட்டி விடும் எனவே சிங்களப் பேரினவாதத்தின் ஏவலாளராகச் செயற்படும் சிறிலங்கா அரச படைகளுக்கு ஆலோசனை பயிற்சி மற்றும் ஆயுத தளபாட விநியோகத்தைத்தங்களது அரசாங்கம் மேற்கொள்வதை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இவ்வகையான செயற்பாடுகள் தமிழ் மக்களால் வெறுக்கப்படுவதாகவே அமைந்துள்ளது என்பதையும் சமாதானச் செயற்பாடுகளின் இலக்கையே சிதறடிப்பவையாகவும் உள்ளன என்பதையும் தங்களுக்கு அறியத்தருகின்றோம். எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'இது தொடர்பாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை விடுத்த அறிக்கையில்,பாரியதொரு யுத்தத்திற்கான தயார்ப்படுத்தலில் சிறிலங்கா அரசு ஈடுபட்டு வருவதை அண்மைக்கால வெளிநாட்டு இராணுவ அதிகாரிகளின் வருகை உறுதிப்படுத்துகின்றது. அதிலும் குறிப்பாக அமெரிக்க இராணுவப் புலனாய்வு அதிகாரிகளின் குடா நாட்டு வருகையும், இறுதியாக அமெரிக்க அரசின் கடற்படையின் பசுபிக் பிராந்தியத் தளபதியின் விஜய மும் மக்கள் மத்தியில் மீண்டும் யுத்தம் பற்றிய அச்ச உணர்வுகளை அதிகரித்துள்ளது. அண்மையில் சிறிலங்கா அரசு செய்துகொண்ட துறைமுகங்கள் பாதுகாப்புத் தொடர்பாக ஒப்பந்தத்தின் பிரகாரம் அவர் வருகை தந்து குடாநாட்டின் முக்கிய இராணுவத் தளங்களுக்கும், கடற்படைத்தளங்களுக்கும் சென்று கலந்துரையாடல்களை நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

இன்று சர்வதேசம், தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஏற்று சமாதான பேச்சுக்குச் செல்லுமாறு சிறிலங்கா அரசைத் தூண்ட வேண்டும். நிரந்தர சமாதானம் நிலைக்க வேண்டுமானால் தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான சரியான தீர்வினை சிறிலங்கா அரசு தமிழ் மக்களிற்கு வழங்க வேண்டும். அத்துடன் இதற் கான அழுத்தத்தினைச் சிறிலங்கா அரசுக்கு அமெ ரிக்கா வழங்குவதையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். மாறாக சிறிலங்கா அரசினதும், இராணுவத்தினதும் நலன்களை முன்னிலைப்படுத்தும் அமெரிக்க அரசின் இத்தகைய செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்துடன் இத்தகைய செயற்பாடுகளை உடன்நிறுத்தி சமாதானப் பேச்சுக்கள் தொடர ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் பண்பாட்டு மையம் விடுத்துள்ள அறிக்கையில்: கடந்த 5 ஆம் திகதி அமெரிக்கத் தளபதி ஒருவர் யாழ்குடாநாட்டில் இராணுவ முகாங்களுக்கும் இராணுவ நிலைகளுக்கும் சென்றுள்ளார்.இதைப் பத்திரிகைகளில் வாசிக்கின்ற போது தமிழ் மக்கள் மத்தியில் அச்சமும் வெறுப்பும் தூண்டப்படுகிறது.சமாதானத்திற்காக செயற்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் மக்களிடத்து இத்தகைய மன உணர்வுகளைத் தூண்ட[illegible] அமெரிக்காவின் இச் செயலை நாம் மிக வன்மை[illegible]க் கண்டிக்கின்றோம். 'உங்கள் இச் செயலுக்கு உலகிற்கு பயங்கரவாதத்தை ஏற்றுமதி செய்யும் நடவடிக்கையாகவே அமையும்' என்று நாம் கருதுகின்றோம்என்பதைநாம்அமெரிக்காவிற்கு சொல்ல விரும்புகின்றோம்.எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (36)

## மாற்று...

அட்டையில் பாலசிங்கம் சசிக்குமார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் மாற்று ஆயுதக்குழு ஒன்றில் உறுப்பினராக இருக்கலாமென நம்பப்படுகின்றது.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு மட்டக்களப்பு பதில் நீதவான் வினோபா இந்திரன் சென்று பார்வையிட்டார். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளும் வந்து துப்பாக்கிசூட்டுச் சம்பவம் பற்றி ஆராய்ந்தனர்.

இதேவேளை இச்சம்பவத்தில் இறந்தவர் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழு உறுப்பினர் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக இணையத்தளச் செய்தியொன்று கூறுகிறது..எனினும், மட்டக்களப்பில் உள்ள ஆயுதக்குழு உறுப்பினரொருவர், கொல்லப்பட்ட மேற்படி நபர் இராணுவத்துடன் நேரடியாகவே சேர்ந்தியங்கும் ஒரு உளவாளி என்றே ஊடகமொன்றிற்குத் தெரிவித்திருந்தார். ஆனால் பொலிசார் மேற்படி நபர் ஈ.பி.டி.பி ஆயுதக்குழுவைச் சேர்ந்த கரன் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் கரையோரப் பகுதியான களுதாவளையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நபர்கள் மோட்டார் சைக்கிளில் வந்ததாகவும், அவர்கள் மேற்படி நபரைச் சுட்டுக் கொன்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை களுதாவளையில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கும் தமக்கும் தொடர்பில்லையென விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் சிறிலங்காப்படையின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே நடைபெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

## பரீட்சை...

இதேவேளை பெறுபேறுகள் பாடசாலைகளுக்கு இன்று தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுமென பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## கருணா...

தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவர் கருணா குழுவுடன் தொடர்பு இருக்கலாமென விசாரணைகளை மேற்கொண்டுவருகின்ற பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## இ.த.அ.சபை...

அவர்களுடன் சந்திப்பு மேற்கொண்டது.

இந்தக் குழுவானது பௌத்த மதகுருக்கள், கத்தோலிக்க மதகுருக்கள் ,வர்த்தகசங்கப் பிரதிநிதிகள் மற்றும் ஊடகப்பிரதிநிதிகள் போன்றோரை உள்ளடக்கியிருந்தது சிவில் சமூகத்தினரைப் பலப்படுத்துவதற்கும், சமாதான நடவடிக்கைக்கு ஆதரவு வழங்குவதற்குமான தமது அர்ப்பணிப்பினை வருகை தந்தவர்கள். தமிழ்ச்செல்வனுக்குக் குறிப்பிட்டனர். இத்தீவிலுள்ள வேறுபட்ட இனங்கள்,மதங்கள் மத்தியில் நல்லுறவினையும் மீளிணக்கத்தினையும் ஏற்படுத்தத் தொடர்பு[illegible] களில் தம்மால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்[illegible] இவர்கள் ஆழமாக விளக்கினார்கள்.

சமாதான நடவடிக்கையினை முன்னெடுத்துச் செல்வதில் என்னஇடையூறுகள் உள்ளன என்பது தொடர்பில் வருகைதந்தவர்களால் கூறப்பட்ட கூற்றுக்களுக்கு பதிலளிக்கையில் இந்த இடையூறுகளை நீக்குவதற்கு யுத்தநிறுத்த உடன்படிக்கையினை பேணுவதும் ,போரினால் அழிவுற்ற வடக்கு -கிழக்கு பிராந்தியத்தில் இயல்பு நிலையினை மீள நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதும் மிக முக்கியமானதும் அவசரமானதுமான நடவடிக்கைகள் ஆகுமெனத் தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டார். சமாதானத்தின் பிரதிபலன்களைத் தாம் அனுபவிக்கவில்லையென தமிழ்மக்கள் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். எனத் .தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டார். அவர்களுக்கு இயல்பு நிலையினை ஏற்படுத்துவது, அவர்கள் தமது வீடுகளுக்கு மீளச் செல்வதற்கும் தமது சொந்த வாழ்விடங்களில் விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்களைச் செய்வதற்குமான உரிமையினை நிலைநாட்டுவதற்கு அவசியமானதென அவர் குறிப்பிட்டார்.

தமிழ்ச்செல்வன் மேலும் கூறுகையில், அவர்கள் தமது வீடுகளுக்குச் செல்ல அனுமதி மறுப்பதும், இராணுவம் அவர்களது வீடுகளை ஆக்கிரமித்திருப்பதும் தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும் எனக் குறிப்பிட்டார். தமிழ் மக்கள் சமாதான நடவடிக்கையில் பங்கு வகிக்க வேண்டுமாயின் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்வேறு வாக்குறுதிகளை அமுல்படுத்துவதன் மூலம் அரசாங்கம் தனது நேர்மையினை வெளிப்படுத்தவேண்டும். தமிழ் மக்கள் தமது நியாயமான உரிமைகளை மட்டுமே கேட்கிறார்கள் என்றும் அரசியல்வாதிகளால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட தவறான பார்வையினை சிங்கள மக்கள் அகற்ற வேண்டும் என்றும் தமிழ்ச்செல்வன் சிவில் சமூகத்துக்கு ஒரு செய்தியாகக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து குறிப்பிடுகையில் தேசிய நலனுக்காகவன்றி அற்ப அரசியல் ஆதாயங்களுக்காகச் செயற்படக்கூடாதென தெற்கிலுள்ள சிவில் சமூகம் தமது தலைவர்கள் மீதும்அழுத்தம் கொடுக்க வேண்டும் என தமிழ்ச்செல்வன்குறிப்பிட்டார். இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைவு தொடர்பில் குறிப்பிடுகையில், இது மீள்குடியமர்வு, மீள் கட்டமைப்பு, புனர்வாழ்வு போன்ற பரப்புக்களில் மக்களின் உடனடி மனிதாபிமானத் தேவைகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டது என்றும் தெற்கிலுள்ள மக்களுக்கு தவறான எண்ணத்தினைத் தோற்றுவிக்க இவ்விடயத்தினைஅரசியல்வாதிகள் பயன்படுத்தியுள்ளமை துரதிஷ்டவசமானது என்றும் தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களும், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் புலித்தேவன், ஜோர்ஜ் ஆகியோரும் தென்னிலங்கை சமாதானக்குழுவில் பிக்குகள்பௌத்த பிக்குணிகள் அறக்கட்டளை, அங்கிலியன் திருச்சபை, சுவர்ணா அறக்கட்டளை, செவன அறக்கட்டளை,பெண்கள்வணிக சம்மேளனம், இலங்கை ஆசிரியர் சங்கம், தொழிற்சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.


# சாவு அறிவித்தல்

மலர்வு
11 - 06 - 1939



உதிர்வு
06 - 08 - 2004

## அந்தோனிப்பிள்ளை மரியரத்தினம்

யாழ்ப்பாணம் வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி இல 74 கனகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னைநாள் கரைச்சி தெற்கு பல.நோ.கூ.சங்க முகாமையாளருமான மரியரத்தினம் 06.08.2004ஆம் திகதி காலமானார். அன்னார் மரியலூர்துநாயகியின் அன்புக் கணவரும் புனிதராஜா, (அக்கராயன் ப.நோ.கூ. சங்கம்) அற்புதராஜா(அமுதக்கடல் பல்பொருள் வாணிபம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விஜயா,சுகனியா, ஆகியோரின் அன்பு மாமனாரும், திலக்ஷன், திலக்ஷனா, திலக்ஷிகா, திவ்வியன், சந்தூஸ், சந்தூஷினி ஆகியோரின் அன்புப் பேரனும், ஆவார். .அன்னாரின் நல்லடக்கம் இன்று (07.08.2004ஆம்திகதி) மாலை 3மணியளவில் ஆனந்தநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
(4650) மனைவி, பிள்ளைகள்.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 07 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.